பாரதி கலை மன்றம், ஹூஸ்டன், டெக்சாஸ்

Bharathi Kalai Manram, Houston, Texas

தமிழ்ச்சாரல்

வண்ணமலர்

நவம்பர் – 2026



தீபாவளி சிறப்புமலர்

தமிழ்த்தாய் வாழ்த்து



"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடர்நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!"

– மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை

பொருளடக்கம்

ஆசிரியர் பக்கம்	4
தலைவர் உரை	5
துணைத் தலைவர் உரை	7
2026-2027 BKM தமிழ்ப்பள்ளி விவரங்கள்	8
BKM நிர்வாக குழு 2026	9
BKM நிகழ்வுகள் 2026	10
பாரதி கலை மன்றம் சார்பில் பொங்கல் விழா	11
BKM சட்ட விதிமுறைகள் திருத்தம்	17
சாகுந்தலம் நாட்டிய நாடகம்	19
BKM நாள் 2026 – மரபையும் முன்னோடிகளையும் போற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க விழா	21
ஹைக்கூ எனப்படுவது யாதெனின் ....சுஜாதாவின் வரிகள்....	23
BKM தமிழ் பள்ளிகள்	24
மோனம் கலைந்த கானகம்	29
பறை இசைக்கருவியும் தமிழரின் வாழ்வியலும்	30
திப்பு சுல்தானின் புதையல் தடத்தில்	32
என்னைப்பிடித்த பிடி!	33
புலம்பெயர்வு	34
குறையென நினைப்பதே குறை	35
கவின் செல்போனும் நிஜ உலகமும்	36
யானையும் எலிகளும் ஒற்றுமையின் வலிமை	37
என்றும் மாறாதது	38
நாய்க்கு கா(வ)ல்	39
சார்... உங்கக் கையால்!	40
ராமுவும் இரத்தக்காட்டேரியும்	44
சித்திரச் சாளரம்	46
இந்திய ஸ்டைல் குனாஃபா	49
திருமுறையில் அறிவியல்	50
பொமோடோரோ நுட்பம்	52
டெக்சாஸ் இரும்பு மனிதன்	53

Special Mention

Tamil Charal Front cover design	–	Ravisankar Periasamy
Tamil Charal Back cover design	–	Sreedevi subramanian
Tamil Charal Book Graphics	–	Sudalai , Esakki Graphics
Tamil Charal Book Printing	-	Astro Printing, Houston

ஆசிரியர் பக்கம்

அமெரிக்க மண்ணில் தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் பணியில் தொடர்ந்து பயணித்து வருகிறது ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் (Bharathi Kalai Manram – BKM).

BKM தமிழ்ச்சாரல் தீபாவளித் திருநாள் சமயத்தில் தீபச்சுடராய் திகழ்ந்து வெளியாகிறது. படைப்பாற்றலை வெளிப்படுத்த தமிழ்ச்சாரல் இதழ் அழகியதோர் சாளரமாக உள்ளது. கவிதை, கதை, கட்டுரைகள், நூல் அறிமுகம், வாசிப்புப் பகிர்வு, நேர்காணல்கள், உள்ளூர் சாதனையாளர்களை அடையாளம் கண்டு பெருமைப்படுத்துதல், தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளின் எழுதும் மற்றும் வரையும் திறன், சமையல் குறிப்பு எனப் பல்சுவையோடு மலர்கிறது.

மன்றத்தின் 52-வது ஆண்டைக் கொண்டாடும் வகையில், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு, பிரம்மாண்டமாகத் திறந்து வைக்கப்பட்டது. பெருந்திரளானோர் பங்கேற்ற இந்நிகழ்வு, தமிழுணர்வையும் பாரதியின் இலட்சியங்களையும் போற்றும் மறக்க முடியாத தருணமாக அமைந்தது.

வரும் ஆண்டுகளில் தமிழ்க் கல்வியை விரிவுபடுத்தி, கலை இலக்கியங்களை வளர்த்து, மாணவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி, சமூக ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவதே நமது இலக்கு. தலைமுறைகள் மாறினாலும், தமிழின் மீதான பற்று நம்மை என்றும் ஒன்றிணைக்கட்டும்.

தமிழ்ச்சாரல் இதழுக்குப் படைப்புகளை அனுப்பிய அனைவருக்கும் எங்கள் உளம்நிறை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழால் ஒன்றிணைவோம்; தொண்டால் தலைமுறைகளை உயர்த்துவோம்!

வாழ்க தமிழ்! வளர்க BKM!





நன்றி, என்றும் அன்புடன்,

ரவிசங்கர் பெரியசாமி, இலக்கிய இயக்குநர்

ஸ்ரீதேவி சுப்பிரமணியன், இணை இலக்கிய இயக்குநர்

ஆசிரியர் குழு, தமிழ்ச் சாரல் – 2026

பொறுப்புத் துறப்பு: வாசகர்களின் வசதிக்காக சில இடங்களில் ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலைவர் உரை



அன்பு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் மற்றும்
தமிழ் சமூகத்தின் அன்பு நண்பர்களே,

பாரதி கலை மன்றத்தின் தலைவராக இந்த ஆண்டில் பணியாற்றிய அனுபவத்தை நினைத்துப் பார்க்கும்போது, என் மனம் நிறைந்த மகிழ்ச்சியும் நன்றியும் பெருமையும் அடைகிறது. இந்த ஆண்டு முழுவதும் பாரதி கலை மன்றத்திற்கு நீங்கள் வழங்கிய ஆதரவு, ஊக்கம் மற்றும் ஒத்துழைப்பிற்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய நிர்வாகக் குழுவை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஒவ்வொருவரும் தங்கள் திறமையாலும் அர்ப்பணிப்பாலும் அமைப்பின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு செய்துள்ளனர். இந்தப் பயணம் முழுவதும் எனக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து, முழுமையான ஆதரவை வழங்கிய என் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு என் உளமார்ந்த நன்றிகள்.

இந்த ஆண்டில் நாம் ஒன்றிணைந்து பல குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளோம்:

- பாரதி கலை மன்றத்தின் 52 ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக மகாகவி பாரதியார் சிலை திறப்பு விழாவை நடத்தினோம்.
- பாரதி கலை மன்றத்தின் 52 ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக, அமைப்பின் அடித்தளத்தை அமைத்து வளர்த்த நிறுவன முன்னோடிகள் அனைவரையும் கௌரவிக்கும் வாய்ப்பு கிடைத்தது எங்களுக்கு ஒரு பெரும் பாக்கியமும் பெருமையும் ஆகும். அவர்களின் தொலைநோக்குப் பார்வை, தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பை அங்கீகரித்து சிறப்பித்தது இந்த ஆண்டின் மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும்.
- உறுப்பினர்களின் நலனையும், அமைப்பின் எதிர்கால வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, நிர்வாகக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து மன்றத்தின் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்து, தேவையான மாற்றங்களை உறுப்பினர் ஒப்புதலுடன் கொண்டு வந்தோம்.
- பாரதி கலை மன்றத்திற்கு வாழ்நாள் முழுவதும் சிறப்பான பங்களிப்பு வழங்கிய திரு. எஸ். ஜி. அப்பன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கினோம்.
- தமிழ் சமூகத்தின் முன்னோடிகளான டாக்டர் வி. அழகர்சாமி மற்றும் திரு. சாம் கண்ணப்பன் ஆகியோரை சமூக முன்னோடி விருதுகள் வழங்கி கௌரவித்தோம்.
- பாரதி கலை மன்ற வரலாற்றில் முதல் முறையாக, ஹூஸ்டனில் நடைபெற்ற இசைஞானி இளையராஜா அவர்களின் நேரடி இசை நிகழ்ச்சிக்கு இணை ஆதரவாளர்களாக இருந்தோம். இந்த வாய்ப்பு எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் தந்தது.
- பாரதி கலை மன்ற வரலாற்றிலேயே முதல் முறையாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் திரைப்படத்திற்கு முதல் நாள் முதல் காட்சி நிகழ்வை ஏற்பாடு செய்தோம்.

- மன்றத்தின் முதல் தீபாவளிக் கொண்டாட்டத்தை வெற்றிகரமாக நடத்தினோம்.
- நாடு முழுவதிலுமிருந்து படைப்பாளர்கள் கலந்து கொண்ட குறும்படப் போட்டியை நடத்தி, புகழ்பெற்ற இயக்குநர் வசந்த் அவர்களை நடுவராக அழைத்து நிகழ்ச்சியை சிறப்பித்தோம்.
- குரு முரளிதரன் அவர்களின் வழிகாட்டுதலில், இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்ற "சகுந்தலா" என்ற பிரம்மாண்டமான நடன நாடகத்தை மேடையேற்றினோம்.
- கல்விச் சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் பாரதி கலை மன்ற தமிழ் பள்ளியின் வுட்லாண்ட்ஸ் கிளையைத் தொடங்கினோம்.
- பாரதி கலை மன்ற வரலாற்றில் முதல் முறையாக தோட்டக்கலை மன்றத்தை அறிமுகப்படுத்தினோம்.
- மேலும், இந்த ஆண்டு மன்ற உறுப்பினர் எண்ணிக்கை 550-ஐ எட்டி, அமைப்பின் வரலாற்றில் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

மேலும், இந்த ஆண்டு நமது உறுப்பினர்களுக்காக பல புதிய, சுவாரஸ்யமான, பயனுள்ள மற்றும் மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளை வழங்கியதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். கலை, இலக்கியம், இசை, திரைப்படம், கல்வி மற்றும் சமூக ஒற்றுமையை வளர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து, அனைத்து வயதினரும் ரசிக்கும் அனுபவத்தை உருவாக்க முயற்சித்தோம். இந்நிகழ்ச்சிகள் உங்களுக்கு இனிய நினைவுகளையும் மகிழ்ச்சியான அனுபவங்களையும் தந்திருக்குமென நம்புகிறேன்.

- இந்த ஆண்டில் நாம் ஒன்றிணைந்து செயல்பட்டு பல அருமையான சாதனைகளை நிகழ்த்தியிருப்பது பெரும் மகிழ்ச்சியையும் நிறைவையும் அளிக்கிறது.
- உங்கள் தொடர்ந்த ஆதரவுடன், வருங்காலங்களில் இன்னும் சிறப்பான நிகழ்ச்சிகளையும், புதிய முயற்சிகளையும், உயர்ந்த சாதனைகளையும் நோக்கி பாரதி கலை மன்றம் பயணிக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.
- அடுத்த ஆண்டிற்கான தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள திரு. கண்ணன் அவர்களுக்கும், அவருடைய நிர்வாகக் குழுவினருக்கும் நீங்கள் இதுவரை வழங்கி வந்த அன்பு, ஆதரவு மற்றும் ஊக்கத்தைத் தொடர்ந்து வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் ஒத்துழைப்பும் பங்களிப்பும் பாரதி கலை மன்றத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் என்றும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.*

எனக்கும் எனது அற்புதமான நிர்வாகக் குழுவிற்கும் நீங்கள் வழங்கிய அன்பும் ஆதரவும் ஊக்கமும் அளவிட முடியாதவை. அதற்காக என் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், நண்பர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பாரதி கலை மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

****ஒன்றிணைந்து செயல்படுவோம்.**

மேலும் பிரகாசமான பாரதி கலை மன்றத்தின் எதிர்காலத்தை உருவாக்குவோம்.**

அன்புடன்,

யாமினி விஜயகுமார்

தலைவர் 2026

பாரதி கலை மன்றம் ஹூஸ்டன்

துணைத் தலைவர் உரை

அன்புடையீர்,

பாரதி கலை மன்றம் – ஹூஸ்டன் சார்பாக உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியின் இனிமையையும், தமிழர் பண்பாட்டின் சிறப்பையும், நமது பாரம்பரியத்தின் பெருமையையும் தொடர்ந்து எடுத்துச் செல்லும் ஒரு சிறந்த முயற்சியாக "தமிழ் சாரல்" ஆண்டுமலர் வெளிவருகிறது. ஒவ்வொரு ஆண்டுமலரிலும் நமது உறுப்பினர்கள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களின் படைப்புகளைத் தாங்கி வரும் இவ்விதழ், நம் சமூகத்தின் எண்ணங்களையும் திறமைகளையும் இணைக்கும் ஒரு அழகிய பாலமாக விளங்குகிறது.

அமெரிக்க மண்ணில் வாழ்ந்தாலும், தமிழ்மொழியுடனும் தமிழ்ப்பண்பாட்டுடனும் நமது உறவு என்றும் வலிமையாக இருக்க வேண்டும். நமது குழந்தைகள் தமிழ் பேசவும், படிக்கவும், எழுதவும் ஆர்வம் கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான வாய்ப்புகளையும், ஊக்கத்தையும், வழிகாட்டுதலையும் வழங்குவது நம் அனைவரின் பொறுப்பாகும். தமிழ் வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், இலக்கியச் சந்திப்புகள், போட்டிகள் மற்றும் சமூக நிகழ்வுகள் மூலம் இந்தப் பணியை பாரதி கலை மன்றம் தொடர்ந்து சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

"தமிழ் சாரல்" இதழில் இடம்பெறும் ஒவ்வொரு கட்டுரையும், கவிதையும், சிறுகதையும், ஓவியமும் நம் சமூகத்தின் படைப்பாற்றலுக்குச் சான்றாகும். குறிப்பாக, இளம் தலைமுறையினர் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் தளமாக இந்த இதழ் அமைந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அவர்களை ஊக்குவிப்பதும், அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுவதும் நமது கடமையாகும்.



இவ்விதழை சிறப்பாக உருவாக்க உழைத்த ஆசிரியர் குழுவினருக்கும், படைப்புகளை வழங்கிய அனைத்து எழுத்தாளர்களுக்கும், தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இல்லாமல் "தமிழ் சாரல்" போன்ற ஒரு சிறப்பான வெளியீடு சாத்தியமல்ல.

நம் தாய்மொழியை நேசிப்போம்; அடுத்த தலைமுறைக்கு அதை அழகாகக் கற்றுக் கொடுப்போம்; தமிழர் பண்பாட்டையும் கலை மரபுகளையும் பெருமையுடன் பேணிப் பாதுகாப்போம்.

தமிழ் வளர்க!

அன்புடன்,

கண்ணன் காந்தி

துணைத் தலைவர், பாரதி கலை மன்றம் – ஹூஸ்டன்





பாரதி கலை மன்றத் தமிழ்ப்பள்ளியின் அனைத்துக் கிளைகளுக் கான முகவரி, வகுப்பு நேரங்கள் மற்றும் நிர்வாகப் பொறுப்பாளர்கள் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

பியர்லேண்ட் (Pearland)

முதல்வர்: சுபஸ்ரீ திருமலை குமாரா
பிற்பகல் 2:00 – 4:00
Sri Meenakshi Temple Society (MTS)
17130 McLean Road, Pearland, TX 77584
principal.pl@bkmhouston.org

சுகர்லேண்ட் (Sugarland)

முதல்வர்: கீதா விநாயகமூர்த்தி
துணை: ஜீவன் பிரசாத் சேகர் / ரவிசங்கர் பெரியசாமி
பிற்பகல் 3:00 – 5:00
Telfair Montessori
1210 Museum Square Drive, Sugar Land, TX 77479
principal.sl@bkmhouston.org

சைப்ரஸ் (Cypress)

முதல்வர்: விஜயானந்த் செல்வராஜ்
துணை: ரம்யா மயில்சாமி
பிற்பகல் 2:00 – 4:00
Cy-Fair Christian Church
9730 Grant Rd, Houston, TX 77070
principal.cy@bkmhouston.org

ஹூஸ்டன் (Houston)

முதல்வர்: கிருஷ்ணராஜ் நாராயணன்
துணை: அபிராமி பிரபு
முற்பகல் 10:00 – 12:00
Bayland Community Center
6400 Bissonnet St, Houston, TX 77074
principal.hou@bkmhouston.org

கேட்டி வெஸ்ட் (Katy West)

முதல்வர்: மணிமேகலை கோபாலகிருஷ்ணன்
துணை: சுவாதி பொன்னுசாமி / விக்ரம் செல்வராஜ்
பிற்பகல் 3:00 – 5:00
Kids 'R' Kids Learning Academy
of Cardiff Ranch
4515 FM 1463, Katy, TX 77494
principal.ky@bkmhouston.org

கேட்டி ஈஸ்ட் (Katy East)

முதல்வர்: கவிதா சரவணன்
துணை: ஜோதி பாபு ராவ்
பிற்பகல் 3:00 – 5:00
Best Kids Academy
21915 Royal Montreal Dr, Katy, TX 77450
principal.kye@bkmhouston.org

சைப்ரஸ் இணைப்பு (Cypress Annex)

முதல்வர்: மணிகண்டன் ஜவஹர்லால்
துணை: சுதாகர் விஸ்வநாதன் / தியாகராஜன் ராமநாதன்
பிற்பகல் 1:30 – 3:30
Richard & Meg Weekley Community Center
8440 Greenhouse Rd, Cypress, TX 77433
principal.bl@bkmhouston.org

BKM நிர்வாகக் குழு 2026



யாமினி
விஜயகுமார்
(தலைவர்)



நந்து
ராதாகிருஷ்ணன்
(செயலாளர்)



இராமலிங்கம்
மகாதேவன்
(பொருளாளர்)



இளங்குழலி
மணி
(தகவல் தொடர்பு
இயக்குனர்)



ரவிசங்கர்
பெரியசாமி
(இலக்கிய இயக்குனர்)



கண்ணன்
காந்தி
(துணைத் தலைவர்)



சவிதா
வித்யாபிரகாஷ்
(இணைச் செயலாளர்)



சிவா T.G
(இணைப்
பொருளாளர்)



இலக்கியராஜா
ஸ்டாலின்
(இணைத் தகவல்
தொடர்பு இயக்குனர்)



ஸ்ரீதேவி
சுப்பிரமணியன்
(இணை இலக்கிய
இயக்குனர்)



விஸ்வநாதன்
இராமன்
(நிர்வாக இயக்குனர்)



ஹேமலதா
சுவாமி
(நிர்வாக இயக்குனர்)



அனிதா
குமரன்
(முன்னாள் தலைவர்)



வந்தனா
இராமமூர்த்தி
(தமிழ்ப் பள்ளி
இயக்குனர்)

BKM நிகழ்வுகள் 2026

ஜனவரி (January)

- 01/24 – BKM பொங்கல் 2026 & பாரதியார் சிலை திறப்பு விழா

பிப்ரவரி (February)

- 02/14 – "ராஜா 50" – இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டு கால இசைப் பயணக் கொண்டாட்டம்
- 02/28 – தமிழ் பள்ளி வருடாந்திரப் போட்டிகள்

மார்ச் (March)

- 03/07 – BKM Pickleball Tournament
- 03/19 – கோல்டன் குரூப்: முதல் காலாண்டு நேரடி சந்திப்பு
- 03/29 – BKM Annual Picnic நிகழ்ச்சி

ஏப்ரல் (April)

- 04/11 – BKM Co-Sponsored: The Guitar Prasanna Band
- 04/12 – பாட்டும் பரதமும் – கர்நாடக இசை & நடன நிகழ்ச்சி
- 04/18 – தமிழ் ஸ்டேஜ் கிரியேஷன்ஸ் நாடகம்: யாருக்கு மாப்பிள்ளை யாரோ
- 04/28 – BKM தமிழ் சபை – சங்கம் முதல் SML வரை – ஜூம் (Zoom) நிகழ்வு

மே (May)

- 05/01 – BKM கார்டன் கிளப் – தொடக்க விழா
- 05/01 – BKM Co-Sponsored: 'ஜெகனே தந்திரம்' நகைச்சுவை நிகழ்ச்சி
- 05/07 – BKM Co-Sponsored: ஆர். மாதவனுடன் துரந்தர் பார்ட்டி
- 05/09 – மீனாட்சி தியேட்டர்ஸ் நாடகம்: தங்கப்பதக்கம் 2.0
- 05/16 – தமிழ் பள்ளிகள் ஆண்டு விழா – பட்டமளிப்பு & கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

ஜூன் (June)

- 06/20 – BKM Badminton Tournament
- 06/28 – கோல்டன் குரூப்: Dr கணேஷ் ராஜாமணி – Fall prevention & safety training.

ஜூலை (July)

- 07/05 – தமிழக கல்வி அமைச்சர் திரு. ராஜ் மோகன் சந்திப்பு

ஆகஸ்ட் (August)

- 08/01 – கவியரசு கண்ணதாசன் நூற்றாண்டு பிறந்தநாள் by இசை கவி ரமணன் நிகழ்ச்சி
- 08/15 – "சகுந்தலா" – மதுரை ஆர். முரளிதரன் வழங்கும் நடன நாடகம்
- 08/16 – BKM Co-Sponsored : Raja 50 – இளையராஜாவின் இசை நிகழ்ச்சி
- 08/29 – பாரதி கலை மன்ற தமிழ் பள்ளியின் வுட்லாண்ட்ஸ் கிளை தொடக்க நிகழ்ச்சி

செப்டம்பர் (September)

- 09/05 – BKM தினம், தமிழ் பள்ளி ஆசிரியர்கள் பாராட்டு விழா, BKM குறும்பட திரையிடல் & விருதுகள் வழங்கும் விழா, நிறுவன முன்னோடிகள் அனைவரையும் கௌரவிக்கும் விழா
- 09/06 – புகழ்பெற்ற பாடகர் மனோ வழங்கும் இசை மாலை

அக்டோபர் (October)

- 10/03 – நேபாளத்திற்கான நிதி திரட்டல் – மெல்லிசை நிகழ்ச்சி, Estate Planning in uncertain times for Golden Group members(via zoom)
- 10/14 –சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் திரைப்படத்திற்கு முதல் நாள் முதல் காட்சி நிகழ்ச்சி

நவம்பர் (November)

- 11/01 – தீபாவளி கொண்டாட்டம் – இசை, நடனம் மற்றும் குடும்பக் கொண்டாட்டம்
- 11/07 – BKM Co-Sponsored :Global grace cancerrun
- 11/15 – BKM Co-Sponsored : சைக்கிள் கேப் புரொடக்ஷன்ஸ் நாடகம்:லைட்டா பல்பு

டிசம்பர் (December)

- BKM பொதுக்குழு கூட்டம்



பாரதி கலை மன்றம் சார்பில் பொங்கல் விழா

பாரதி கலை மன்றம் சார்பில் பொங்கல் விழா January 24, 2026 அன்று ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோயிலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. பார்வையாளர்களின் கண்களைக் கவரும் வகையில் விழா அரங்கம் விழாக் கோலம் பூண்டது போன்ற பிரமாண்டமான அலங்காரங்களுடன் அழகுற அமைந்திருந்தது.

சுமார் 700 பங்கேற்பாளர்கள் இந்தக் பொங்கல் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கெடுத்த இந்த நிகழ்ச்சியில் சிறுவர் சிறுமிகளுக்கான கலை நிகழ்ச்சிகள், மகாகவி பாரதியாரின் சிலை திறப்பு ஆகியன இடம்பெற்றன. மேலும் மீனாட்சி அம்மன் கோயில் செயற்குழு உறுப்பினர்களும் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார்கள்.

இந்தக் கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக சமூகத்தின் பல்வேறு தலைவர்கள்,உறுப்பினர்கள் மற்றும் பாரதி கலை மன்றத்தின் முன்னாள் தலைவர்கள் புடைசூழ நாதஸ்வர இசை, கும்மி, சிலம்பாட்டம் ஆகியவை களைகட்ட நம் தமிழ்நாட்டின் பெருமைமிகு கவிஞரான மகாகவி பாரதியாரின் சிலையானது ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு அவரது சிலை திறந்து வைக்கப்பட்டது.



பாரதி கலை மன்றத்தின் 52-ஆவது ஆண்டில் மகாகவி பாரதியார் சிலையைத் திறந்து வைப்பதில் BKM Board, 2026 பெருமையும் கௌரவமும் கொள்கிறது. மகாகவி பாரதியாரின் பாரதி கலை மன்றத்தின் விழுமியங்களின் நீடித்த சின்னமாகவும், நமது அமைப்பின் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகவும் திகழும் என்பது திண்ணம். இதன் திறப்பு விழா, "பாரதி கலை மன்றம், 2026, பொங்கல்" கொண்டாட்டங்களின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக அமைந்தது.



பொங்கல் விழா







ராஜா 50 நிகழ்ச்சி





ராஜா 50 நிகழ்ச்சி - 350க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் தங்களது வருகை யினால் ஓர் அற்புதமான மனம் மயக்கும் மாலைப் பொழுதாக அமைந்தது. அரங்கம் நிறைந்த பார்வையாளர்களால் இந்த நிகழ்ச்சி மாபெரும் வெற்றி பெற்றது

இத்தகைய ஒரு இனிமையான இசை மாலையை எங்களுக்கு அளித்து, பழைய ராஜா சார் பாடல்கள் மூலம் எங்களை நினைவுகளின் பாதையில் அழைத்துச் சென்ற அற்புதமான பாடகர்களான:

கிருஷ்ணமூர்த்தி (ஆஸ்டின்)

லதா கிருஷ்ணா (டொராண்டோ)

சாய் சங்கர் (டல்லாஸ்)

சங்கர் நாராயணன் (ஹூஸ்டன்)

பின்னணிப் பாடகி விஷ்ணுப்ரியா (டல்லாஸ்)

சன்விதா ஸ்ரீதர் (ஹூஸ்டன்)

ஆகியோருக்கு நன்றிகள். பாடக பாடகிகள் தங்களது குரல் வளத்தின் மூலம் பார்வையாளர்கள் ஒவ்வொரு வரையும் மீண்டும் அவரவரது பழைய












ALLERGY
LIST




9
8












BKM, MTS &
Meenakshi Theaters
1980s
Drama Queens Present















*பாரதி கலை மன்றத்தின் வளர்ச்சிக்கும், எதிர்கால செயல்பாடுகளுக்கும் ஏற்ற வகையில் நமது சட்டவிதிகளை (Bylaws) முழுமையாக மறுபரிசீலனை செய்து, தேவையான திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் பாரதி கலை மன்ற நிர்வாகக் குழுவும் (Board) சட்டவிதி ஆய்வுக் குழுவும் (Bylaws Committee) இணைந்து இந்தப் பணியைத் தொடங்கினோம்.

ஒரு அமைப்பின் சட்டவிதிகளை மாற்றுவது என்பது வெளியிலிருந்து பார்க்கும்போது, "சில வார்த்தைகளை மாற்றி, சில புதிய விதிகளைச் சேர்ப்பது தானே?" என்று தோன்றலாம். ஆனால், உண்மையில் அதைச் செய்யத் தொடங்கிய பிறகுதான் புரிந்தது. ஒரு காற்புள்ளி (comma) கூட சில நேரங்களில் ஒரு குழுக் கூட்டத்தை உருவாக்கிவிடும்!

இது போன்ற பணிகளுக்கு பாரதி கலை மன்றத்தின் குறிக்கோளும் செயல்பாடுகளும் அறிந்த, டெக்சாஸ் மாநில இலாப நோக்கற்ற அமைப்புகளின் (non-profit organizations) விதிமுறைகள் தெரிந்த குழு மிகவும் அவசியம். அந்த அடிப்படையில், இந்தக் குழுவில் தற்போதைய பாரதி கலை மன்ற நிர்வாகக் குழுவைச் சேர்ந்த இருவரும், பாரதி கலை மன்றத்தின் ஏழு முன்னாள் தலைவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

சட்டவிதி ஆய்வுக் குழு உறுப்பினர்கள்:

1. டாக்டர் பத்மினி ரங்கநாதன்
2. திரு. ஜி. என். பிரசாத்
3. திரு. பார்த்தா கிருஷ்ணசுவாமி
4. திரு. துப்பில் நரசிம்மன்
5. திரு. மணி வைத்தீஸ்வரன்
6. திருமதி பிரியா சந்துரு
7. திரு. செந்தில் ஆற்காடு
8. திரு. விஷி ராமன்
9. திருமதி யாமினி விஜயகுமார்

அவர்களின் பாரதி கலை மன்ற அனுபவமும், பல்வேறு இலாப நோக்கற்ற அமைப்புகளில் பெற்ற அனுபவமும் இந்தப் பணிக்கு மிகப் பெரிய பலமாக இருந்தது.

ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தையும் அனுபவத்தையும் அர்ப்பணித்து, பாரதி கலை மன்றத்தின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தப் பணியில் பங்களித்தனர்.

இந்தப் பணியை ஆய்வுக் குழுவும் நிர்வாகக் குழுவும் மட்டும் செய்து முடித்துவிட வேண்டும் என்பது எங்களின் நோக்கம் அல்ல. பாரதி கலை மன்ற நிர்வாகக் குழு உறுப்பினர்களிடமும், தற்போதைய உறுப்பினர்களிடமும் கருத்துகள், பரிந்துரைகள் மற்றும் பின்னூட்டங்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டோம்.

பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளையும், கேள்விகளையும், நல்ல ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். அவை அனைத்தும் இந்தப் பணியை மேலும் சிந்தித்து தெளிவுபடுத்த உதவின.

அதன் பின்னர், சட்டவிதி ஆய்வுக் குழுவின் விரிவான ஆய்வும் விவாதங்களும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திருத்தங்கள், பாரதி கலை மன்ற நிர்வாகக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

இந்தப் பணியில் சட்டவிதி ஆய்வுக் குழு உறுப்பினர்கள் வாரம் ஒருமுறை தொடர்ந்து 8 முதல் 10 வாரங்கள் சந்தித்து, ஒவ்வொரு விதியையும் பொறுமையாகப் படித்து, விவாதித்து, புரிந்துகொண்டு, தேவையான இடங்களில் மாற்றங்களை முன்மொழிந்தனர்.மொத்தமாக 250-க்கும் மேற்பட்ட மணிநேரங்கள் இந்தப் பணிக்காக செலவிடப்பட்டன.

சில நேரங்களில் ஒரு வாக்கியத்தை மாற்றுவதற்கே பல நிமிடங்கள் விவாதம் நடைபெற்றது. "இந்த வார்த்தை இருக்க வேண்டுமா?", "இதை இன்னும் தெளிவாக எழுதலாமா?","இது அடுத்த தலைமுறைக்கும் பொருந்துமா?" என்று ஒவ்வொரு விஷயமும் பல கோணங்களில் ஆராயப்பட்டது.

சட்டவிதிகளில் மாற்றம் செய்வது நிர்வாகக்

குழுவின் முடிவாக மட்டும் இருக்கக் கூடாது என்பதால், உறுப்பினர்களின் பங்களிப்புடன் இந்தச் செயல்முறை முன்னெடுக்கப்பட்டது.

இதற்காக, 2026 ஆகஸ்ட் 23, ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு எம்.டி.எஸ். சரஸ்வதி அரங்கில் சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. வாக்களிப்பு நடைமுறை மற்றும் வாக்களிப்பு வழிமுறைகள் குறித்த தனித்தகவல்களும் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டன.

உறுப்பினர்கள் முன்மொழியப்பட்ட சட்டவிதிகளைப் படித்து, புரிந்துகொண்டு, இந்த முக்கியமான செயல்முறையில் தங்களின் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

அதன் விளைவாக, உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் சட்டவிதித் திருத்தங்கள் சிறப்புக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

இந்த முழுச் செயல்முறையிலும் சில உறுப்பினர்கள் தங்களுடைய மதிப்புமிக்க கருத்துகள், பரிந்துரைகள் மற்றும் பின்னூட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றி.

ஒரு அமைப்பின் சட்டவிதிகள் என்பது வெறும் விதிகளும் ஒழுங்குமுறைகளும் அல்ல. அது அந்த அமைப்பு எப்படி இயங்க வேண்டும், எப்படி வளர வேண்டும், எதிர்கால தலைமுறைகளுக்கு எப்படி ஒரு வலுவான அமைப்பை விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்கான ஒரு வழிகாட்டி.

அந்த வகையில், கடந்தகால அனுபவத்தையும், இன்றைய தேவைகளையும், எதிர்கால பாரதி கலை மன்றத்தையும் மனதில் வைத்து இந்த சட்டவிதித் திருத்தம் நடைபெற்றது.

இது சில பக்கங்களைத் திருத்திய பயணம் மட்டுமல்ல; பாரதி கலை மன்றத்தின் அடுத்த தலைமுறைக்காக நாம் சேர்ந்து அமைத்த அடித்தளம்.

அனைவரின் தொடர்ந்த ஆதரவும், பங்களிப்பும், நல்லெண்ணமும் பாரதி கலை மன்றத்தின் வளர்ச்சிக்கு என்றும் துணையாக இருக்கட்டும்!

BKM தமிழ்ப்பள்ளி

வாழிய செந்தமிழ்
வாழ்க ஹூஸ்டன் தமிழர்
வாழிய பாரதி நற்கலைமன்றம்
வாழ்க தமிழ் பள்ளியில் அனைவரும்

இன்றெம துழைப்பு ஓங்கி வளருக
நன்றென மாணவர் நாளும் வளருக
அறிவு செழித்திடுக! சிறந்து ஒளிர்ந்திடுக!
பாரே புகழும் உயர்நிலை எய்துக!

அறிவியல் கணிதம் அனைத்திலும் வெல்க!
விரிந்த இவ்வுலகில் முதன்மை எய்துக!
மாண்புடன் வாழ்க! மானுடம் சிறக்க!
அண்டம் போற்ற! அகிலமே போற்ற!







ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் ஆகஸ்ட் 15, 2026 ஆம் நாளன்று ஏற்பாடு செய்திருந்த 'சாகுந்தலம்' (Shakuntalam) என்ற பிரம்மாண்டமான நாட்டிய நாடகம் அனைவரையும் பரவசத் தில் ஆழ்த்தியது. பிரபல பரதநாட்டியக் கலைஞர், இசை அமைப்பாளர், நடன இயக்குநர் மதுரை ஆர். முரளிதரன் அவர் களின் உன்னதக் கலைப்படைப் பாகும். மகாபாரதத்தின் அடிநாதத்தைக் கொண்டு, சமஸ்கிருதக் கவிஞர் காளிதாசரின் புகழ்பெற்ற 'அபிஞான சாகுந்தலம்' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு இது உருவாக்கப் பட்டுள்ளது.

இக்கலைப்படைப்பின் முக்கிய சிறப்பம்சங்கள் பல இருப்பினும், கர்நாடக இசையையும் மேற்கத்திய சிம்பொனி இசையையும் இணைத்து உருவாக்கப்பட்டதே இதன் மிகப்பெரிய சிறப்பு. ஹங்கேரியின் புடாபெஸ்ட் லைவ் ஆர்செஸ்ட்ரா (Budapest Live Orchestra) அமைப்பைச் சேர்ந்த 65-க்கும் மேற்பட்ட சர்வதேச இசைக்கலைஞர்கள் இதற்காக இணைந்துள்ளனர்.

பாடல் வரிகள், கதை அமைப்பு, இசையமைப்பு, நடனம், இயக்கம் என அனைத்தையும் மதுரை முரளிதரன் பன்முகத்தன்மையோடு வடிவமைத் துள்ளார். இவருக்கு இவரது மனைவி சித்ரா முரளிதரன் மற்றும் மகள் காவ்யா முரளிதரன் ஆகியோர் உறுதுணையாக இருந்துள்ளனர்.

பாரம்பரிய நடன வரம்புகளைத் தாண்டி, அரங்கத்திற்குள் இருந்து கலைஞர்கள் மேடையேறுவது, படகு போன்ற பிரம்மாண்டமான வடிவமைப்புகள், இயற்கைக் காட்சிகளை தத்ரூபமாக வெளிப்படுத்தும் கற்பனைத் திறனுடன் மேடை அமைப்பு வடிவமைப்பு என நவீன மேடை உத்திகள் பார்வையாளர்களின் ஆவலைத் தூண்டிய வண்ணம் இருந்தன. குறிப்பாக, துஷ்யந்த மன்னனும் சகுந்தலையும் பார்வையாளர்கள் அமர்ந்திருக்கும் அரங்கத்திற்குள்ளேயே நடந்து வந்து மேடையேறிய விதம், ரசிகர்களுக்கு ஒரு நேரடித் திரையரங்க அனுபவத்தைத் தந்தது என்றே கூறலாம்.

விசுவாமித்திரரின் தவம், மேனகையின் வருகை போன்ற இயற்கைச் சூழலை விவரிக்கும் காட்சிகளில் கலைஞர்கள் வெள்ளை நிறப் பறவைகளாய் வந்து கதையை விவரித்த விதம் மிகவும் ரசிக்கும்படி இருந்தன. மான்களாக வந்த சிறுமியரின் துள்ளல் நடனமும், மீனவ நடனமும் மாறுபட்ட வகையில் அமைந்து பல்சுவை விருந்தானது.





துஷ்யந்த மன்னனுக்கும் சகுந்தலைக்கும் இடையே மலரும் காதல்தான கதைக் களம். அதில் துர்வாச முனிவரின் சாபம், மோதிரத்தை இழப்பதால் ஏற்படும் பிரிவு, இறுதியில் அவர்களின் மகன் பரதனுடன் நிகழும் உருக்கமான மறுஇணைப்பு ஆகிய அம்சங்கள் நடன மாடியக் குழுக்களின் திறனால் அனைவரையும் நேரம் செல்வது தெரியாமல் கட்டிப் போட்டு விட்டது என்றால் மிகையில்லை.

'சாகுந்தலம்' நாட்டியநாடகம், பார்வையாளர்களைக் முழுமையாக கவரும் வகையில் கலைநயமும் பிரம்மாண்டமும் நிறைந்த ஒரு காட்சி விருந்தாக அமைந்தது. ஹூஸ்டன் மாநகர நடனப்பள்ளிகளின் ஒருங்கிணைந்த முயற்சியும், அனைவரின் துல்லியமான நடன அசைவுகளுடன் நிகழ்வின் ஏனைய சிறப்பம்சங்களும் பலரின் பாராட்டுக்களைப் பெற்றன. நாட்டிய நாடகத்தின் கதையம்சத்தோடு இயைந்த இசையும், நேர்த்தியான உடை வடிவமைப்புகளும் மிகச்சிறந்த பக்கத்துணையாகத் திகழ்ந்தன. சூழலுக்கேற்ப வண்ணங்களை வாரியிறைத்த ஒளி அமைப்பும், காதிற்கு இதம் சேர்த்த ஒலியமைப்பையும் குறிப்பிடத்தக்கது.

பாரம்பரிய பரதநாட்டியக் கலை வடிவத்தை நவீன தொழில்நுட்பங்களோடும் உலகத்தரம் வாய்ந்த இசைக்கோர்ப்போடும் ஹூஸ்டன் மேடையில் கண்டுகளித்த கலை ஆர்வலர்களுக்கு இது ஒரு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.

குடும்பம் என்ற குத்துவிளக்கு



அனந்த லட்சுமணன்

ஆணும் பெண்ணும் மணமான பிறகு புது மருமகள் தன் புகுந்த வீட்டில் குத்து விளக்கு ஏற்றுவது ஒரு விதமான சடங்கு. அதில் சொல்லப்படும் கருத்து என்னவென்றால் !! இங்கு திரி தான் ஆண். எண்ணெய் தான் சக்தி அதாவது பெண்.

திரியான ஆணுக்கு பெண்னே சக்தியாகிறாள். திரியானது சக்தியை (அப்பெண்) எப்படிப்பட்டவளாக இருந்தாலும் அவளை ஏற்று கொள்ள வேண்டும். எண்ணெய் எவ்வளவு சக்தி கொண்டாலும் திரியின் வழியே தான் அதன் சக்தியை கொடுக்க வேண்டும்.

திரியும், எண்ணையும் தனியாக சோதியை கொடுக்க வல்லது தான்.

அதனால் திரியானது அச்சக்தியை ஏற்று கொள்ளாமல் தனியாக சோதியை கொடுக்க தொடங்குமானால் ஒரு சில நிமிடங்களில் அதன் ஆயுள் முடிந்து விடும்.

எண்ணெயோ அதுவும் தனியாக சோதியை கொடுக்க முயன்றால் அது அந்த குடும்பம் என்ற குத்துவிளக்கிறகே ஆபத்து ஆகிவிடும். எண்ணையை ஏற்று கொண்ட திரியே அடக்கமான , அழகான சோதியை கொடுக்கவல்லது.

இது திருமணமான தம்பதியர்களுக்கு நம் பெரியவர்கள் கொடுக்கிற அறிவுரையாகும் .



BKM நாள் 2026 –

மரபையும் முன்னோடிகளையும் போற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க விழா

பாரதி கலை மன்றம் (BKM) 2026, தனது வளமான பாரம்பரியத்தையும் சமூகப் பணியின் சிறப்புமிக்க பயணத்தையும் கொண்டாடும் வகையில் BKM நாள் 2026 நிகழ்வை சிறப்பாக நடத்தியது. இந்நிகழ்வு, தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும் BKM-இன் முன்னேற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கிய ஆளுமைகளை கௌரவிக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்தது.



BKM-இன் வளர்ச்சி, சேவைப் பணிகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை முன்னெடுத்துச் சென்ற பல தலைமுறையினரின் அர்ப்பணிப்பை நினைவுகூரும் இந்த விழா, அமைப்பின் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகப் பதிவு செய்யப்பட்டது.

வாழ்நாள் சாதனையாளர் விருது

BKM அமைப்பின் வளர்ச்சிக்கும் அதன் பணிகளின் விரிவாக்கத்திற்கும் பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய முனைவர் எஸ். ஜி. அப்பன் அவர்களுக்கு "BKM வாழ்நாள் பங்களிப்பாளர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அவரது தொலைநோக்குப் பார்வை, இடையறாத அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியான ஆதரவு





ஆகியவை BKM-இன் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய பங்காற்றியுள்ளன. அவருடைய நீண்டகால சேவையைப் பாராட்டும் வகையில் இவ்விருது வழங்கப்பட்டது.

தமிழ்ச் சமூகத்தின் முன்னோடிகள்

தமிழ்ச் சமூக முன்னேற்றத்திற்காக குறிப்பிடத்தக்க சேவைகளையும் தலைமைப் பண்பையும் வெளிப்படுத்திய திரு சாம் கண்ணப்பன் மற்றும் முனைவர் வி. அழகர்சாமி ஆகியோர் "தமிழ்ச் சமூகத்தின் முன்னோடிகள்" என்ற சிறப்பு கௌரவத்தால் பாராட்டப்பட்டனர்.

அவர்களின் சமூகப் பணி, கலாசார அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டும் தலைமைத்துவம் பல தலைமுறைகளுக்கு ஊக்கமாக இருந்து வருகிறது. தமிழ் மொழி, பண்பாடு மற்றும் சமூக முன்னேற்றத்தில் அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் தனித்துவமிக்கவை என்பதற்கான அங்கீகாரமாக இக்கௌரவம் வழங்கப்பட்டது.

BKM-இன் நிறுவன முன்னோடிகளுக்கான சிறப்பு அங்கீகாரம்

BKM-இன் தோற்றம், வளர்ச்சி மற்றும் நிலையான முன்னேற்றத்திற்கு வலுவான அடித்தளத்தை அமைத்த நிறுவன உறுப்பினர்கள் இந்நிகழ்வில் சிறப்பாக கௌரவிக்கப்பட்டனர்:

- திரு வி. அழகர்சாமி
- திரு எம். பாலகிருஷ்ணன்
- திரு வி. கணேஷ் ஐயர்
- திரு சாம் கண்ணப்பன்
- திரு வி. ஆர். பத்மநாபன்
- திரு முத்து சிவராஜன்
- திரு கே. ஆர். தியாகராஜன்
- திரு ஏ. வி. விஸ்வநாதன்

BKM-இன் 52 ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக, அமைப்பின் அடித்தளத்தை அமைத்து வளர்த்த நிறுவன முன்னோடிகள் அனைவரையும் ஒன்றிணைத்து கௌரவிக்கும் வாய்ப்பு கிடைத்தது எங்களுக்கு மிகுந்த பாக்கியமும் பெருமையும் ஆகும். அவர்களின் தொலைநோக்குப் பார்வை, தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பை அங்கீகரித்து சிறப்பித்தது, இந்த ஆண்டின் மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாக அமைந்தது.

இந்த முன்னோடிகளின் கனவும் கடின உழைப்பும் தான் இன்று BKM சமூகத்தில் பெற்றுள்ள உயரிய இடத்திற்கான அடித்தளமாக விளங்குகிறது.

இந்த சிறப்புமிக்க நிகழ்வில் கலந்து கொண்டு, ஆதரவு வழங்கி, தன்னார்வத்துடன் பங்களித்து, நிகழ்வை வெற்றிகரமாக்கிய அனைவருக்கும் BKM 2026 நிர்வாகக் குழு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நன்கொடையாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் தமிழ் சமூகத்தின் ஒவ்வொரு நண்பரின் ஒத்துழைப்பும் இந்த நிகழ்வை மறக்கமுடியாத ஒன்றாக மாற்றியுள்ளது.

கடந்த காலத்தைப் போற்றி, எதிர்காலத்தை நோக்கி BKM நாள் 2026, ஒரு விழாவைத் தாண்டி, அமைப்பின் வரலாறு, சாதனைகள் மற்றும் எதிர்காலக் கனவுகளை இணைக்கும் அர்த்தமிக்க தருணமாக அமைந்தது.

நாம் ஒன்றிணைந்து நமது கடந்த கால சாதனைகளைப் போற்றுகிறோம்; இன்றைய பங்களிப்பாளர்களை கௌரவிக்கிறோம்; நாளைய தலைமுறைகளுக்காக மேலும் வலுவான எதிர்காலத்தை உருவாக்க உறுதியேற்கிறோம்.

இந்த நிகழ்வு BKM வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத மைல்கல்லாக நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.



ஹைக்கூ எனப்படுவது யாதெனின் ....
சுஜாதாவின் வரிகள்....

- ஜீவன்

ஹைக்கூ என்றால் என்ன?

ஹைக்கூ என்பது பதினேழு அசைகள் (சிலபல்ஸ்) கொண்ட ஒரு ஜப்பானிய கவிதை வடிவம். அதை இந்த நூற்றாண்டில் நவீனபடுத்தி மூன்று/நான்கு வரிக் கவிதைகளாக்கி விட்டனர்.

எது ஹைக்கூ?

ஹைக்கூ என்பது ஒரு *snapshot* என்று சொல் வார்கள். தினவாழ்வில் நாம் பார்க்கும் ஆச்சர் யமான கணங்களை ஒரு சிறிய கவிதையில் சிறை படுத்தும்போது எந்தவிதமான உருவகமோ உவமையோ சமூகச் சாடலோ இன்றி வாச கனின் சிந்தனை என்னும் குளத்தில் எறியப்பட்ட ஒரு சிறு கல்லாக இருக்க வேண்டும்.

எது ஹைக்கூ இல்லை ?

எத்தனை பேர்
இழுத்தும் என்ன
சேரிக்குள் வரவில்லை
தேர்.

சமூக விமர்சனம் பொதிந்திருப்பதால் இது உண்மையான ஹைக்கூ இல்லை.

கல்யாண நேரத்தில்
வீடு வெள்ளையடிக்கப்பட்டபோது
விட்டதில் அவள் செருகிவைத்திருந்த
கனவுகளும் நிறம் மாற்றப்பட்டது

'கனவுகளை' 'கடிதங்களாய்' மாற்றினால் ஹைக்கூ வடிவம் பெறுகிறது. நீங்களும் ஹைக்கூ எழுதி பாருங்களேன். நீங்கள் பார்த்த ஆச்சர்யம் ஒன்றை மூன்று வரிகளில் சிறைபடுத்த வேண்டும்.

உதாரணங்கள்:

நள்ளிரவில்
தூரத்தில்
ஒரு கதவு சார்த்தப்பட்டது

****

முடிவு பெறாத கட்டடம்
கொசுவலைக்குள்
கூலிக்காரியின் குழந்தை

****

சாக்கடையில்
மிதக்கும் முகமூடி
மெல்லத் தலையசைக்கிறது

****

மொட்டை மாடி
எட்டிப் பார்த்துக்
குறைக்கும் நாய்

****

வெயிலில்
தலைமயிர் உலர்கிறது
தலை இல்லாமல்

****

சைக்கிள் ரிக்ஷாவில்
பாரதி வேடத்தில்
மூன்று குழந்தைகள்.

BKM தமிழ் பள்ளிகள்

கடல் கடந்து வந்து, நமக்கென ஒரு வாழ்க்கையை இங்கே அமைத்துக்கொண்டோம். புதிய நாடு, புதிய சூழல், புதிய வாழ்க்கை என்று பல மாற்றங்களை ஏற்றுக்கொண்டாலும், நம்மோடு நாம் கொண்டு வந்த ஒன்றை மட்டும் விட்டுவிட மனம் வரவில்லை — நம் தமிழ்.

நாம் பேசி வளர்ந்த தமிழ். நம் பெற்றோர்களுடனும் தாத்தா பாட்டிகளுடனும் நம்மை இணைத்த தமிழ். நம் கதைகளிலும், பாடல்களிலும், நினைவுகளிலும் கலந்திருக்கும் தமிழ்.

அதே தமிழ் நம் குழந்தைகளுக்கும் சொந்தமாக வேண்டும் என்ற ஆசை நம்மில் பலருக்கும் இருக்கிறது. அந்த ஆசையின் அழகான வடிவம்தான் நமது தமிழ்ப் பள்ளி.

52 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறிய இடத்தில் இரண்டு மாணவர்களுடன் தொடங்கிய ஒரு சிறிய முயற்சி, இன்று எட்டு பள்ளிகளில் நானூறு மாணவர்கள் தமிழ் கற்கும் ஒரு பெரிய குடும்பமாக வளர்ந்திருக்கிறது.

Pre-K முதல் எட்டாம் வகுப்பு வரை, ஒவ்வொரு வாரமும் நூற்றுக்கணக்கான குழந்தைகள் தமிழுக்காக ஒன்று கூடுகிறார்கள். அவர்களுடன் ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்கள் (TAs), ஒருங்கிணைப்பாளர்கள் (Coordinators), தன்னார்வலர்கள் (Volunteers), பெற்றோர்கள் என நமது தமிழ்ப் பள்ளிக் குடும்பமும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், இந்த 52 ஆண்டுப் பயணத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, நாம் உருவாக்கியிருப்பது ஒரு பள்ளியை மட்டும் அல்ல என்பது புரிகிறது.

தமிழின் வழியாக ஒரு சமூகத்தை உருவாக்கியிருக்கிறோம்.

தமிழின் வழியாக உறவுகளை உருவாக்கியிருக்கிறோம்.

தமிழின் வழியாக அடுத்த தலைமுறையை நம் வேர்களோடு இணைத்திருக்கிறோம்.

ஒரு குழந்தை தமிழ்ப் பள்ளிக்கு வரும்போது, தமிழ் எழுத்துக்களையும் சொற்களையும் மட்டும் கற்றுக்கொள்வதில்லை.

அங்கே நண்பர்களைச் சந்திக்கிறார்கள். வாரந்தோறும் ஒன்றாகப் படித்து, பேசி, சிரித்து, விளையாடி ஒன்றாக வளர்கிறார்கள். அந்த நட்பின் வழியாக குடும்பங்களும் ஒன்றோடொன்று இணைகின்றன. ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகிறார்கள். தமிழ்ப் பள்ளி மெதுவாக அவர்களுக்கான ஒரு சமூகமாக மாறுகிறது.

இன்று ஒரே வகுப்பில் அமர்ந்து தமிழ் படிக்கும் குழந்தைகள், நாளை உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கலாம். சிறுவயதில் தமிழ்ப் பள்ளியில் தொடங்கிய நட்புகள், அவர்கள் வாழ்க்கையின் அடுத்தடுத்த கட்டங்களிலும் தொடரலாம்.

அது மொழியறிவு மட்டுமல்ல. அது அவர்களுக்குக் கிடைக்கும் ஒரு தன்னம்பிக்கை. ஒரு அடையாளம். ஒரு பலம்.

தமிழ்ப் பள்ளியுடனான அவர்களின் உறவு எட்டாம் வகுப்போடு முடிந்துவிடாமல், இங்கே படித்துப் பட்டம் பெற்ற மாணவர்கள் மீண்டும் நம்மிடம் வந்து தன்னார்வலர்களாகவும் (Volunteers), ஆசிரியர் உதவியாளர்களாகவும் (TAs) பணியாற்ற வாய்ப்புகளை உருவாக்கி வருகிறோம். நேற்று வகுப்பறையில் மாணவராக அமர்ந்திருந்த ஒருவர், இன்று அதே வகுப்பறைக்குள் வந்து இன்னொரு சிறிய குழந்தைக்குத் தமிழ் கற்றுக்கொடுக்க உதவுவதைப் பார்ப்பதில் ஒரு தனி மகிழ்ச்சி இருக்கிறது.

ஒரு தலைமுறையிடமிருந்து இன்னொரு தலை முறைக்குத் தமிழ் கைமாறும் அழகான தருணங்கள் அவை.

தமிழுடனான அந்தப் பயணம் தொடர்ந்து வளர வேண்டும் என்பதற்காக, இந்த ஆண்டு உயர்நிலைத் தமிழ் மற்றும் போட்டித் தேர்வுகளை (Global seal of biliteracy exam) எழுத விரும்பும் மாணவர்களுக்கான ஒரு புதிய வாய்ப்பையும் உருவாக்கியுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் நமது பள்ளிகளுக்கிடையே பல்வேறு தமிழ்ப் போட்டிகளை நடத்துகிறோம். அதோடு, நமது மாணவர்கள் பள்ளிக்கு வெளியே நடைபெறும் தமிழ்ப் போட்டிகளிலும் கலந்து கொள்கிறார்கள். மற்ற குழந்தைகள் தமிழை எப்படிப் பேசுகிறார்கள், படிக்கிறார்கள், எழுதுகிறார்கள், மேடையில் வெளிப்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கும் வாய்ப்பு அது.

ஒரு குழந்தை தயக்கத்துடன் தமிழில் ஒரு வார்த்தை பேசுவதைப் பார்க்கும்போதும், இன்னொரு குழந்தை மேடையில் தன்னம்பிக்கையுடன் தமிழில் பேசுவதைப் பார்க்கும்போதும், பட்டம் பெற்ற மாணவர்கள் மீண்டும் வந்து தன்னார்வலர்களாக நிற்பதைப் பார்க்கும்போதும், "இதற்காகத்தானே நாம் இதையெல்லாம் செய்கிறோம்" என்று மனம் நிறைகிறது..

இந்தப் பயணம் ஒருவரால் உருவானதல்ல.

தங்கள் வார இறுதி நேரத்தை நமது குழந்தைகளுக்காக அர்ப்பணிக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் உதவியாளர்கள், ஒவ்வொரு பள்ளியையும் வழிநடத்தும் ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வலர்கள், தொடர்ந்து உறுதுணையாக நிற்கும் பெற்றோர்கள், BKM Board மற்றும் BKM உறுப்பினர்கள் — அனைவருடைய நேரம், உழைப்பு, அன்பு மற்றும் அர்ப்பணிப்பு சேர்ந்துதான் இந்தப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு நமது எட்டாவது பள்ளியையும் தொடங்கி, நமது தமிழ்ப் பள்ளிக் குடும்பம் இன்னும் பெரிதாக வளர்ந்திருக்கிறது. ஆனால் எண்ணிக்கைகள் மட்டுமே நமது வளர்ச்சியின் அளவுகோல் அல்ல.

கடல் கடந்து நாம் கொண்டு வந்த தமிழ், நம்மோடு மட்டும் நின்றுவிடாமல், நம் குழந்தைகளிடமும் அவர்களின் குழந்தைகளிடமும் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

52 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு குழந்தைகளுடன் தொடங்கிய அந்தப் பயணம் இன்னும் முடியவில்லை.

ஒவ்வொரு புதிய மாணவருடனும் அது மீண்டும் தொடங்குகிறது.

ஒவ்வொரு புதிய தலைமுறையுடனும் நம் தமிழ் தொடர்ந்து பயணிக்கிறது.




BKM DAY 2026
TEACHERS APPRECIATION DAY -ஆசிரியர் பாராட்டு நாள்


Teachers
BKM Tamil School - Katy West
BKM DAY 2026
TEACHERS APPRECIATION DAY - ஆசிரியர் பாராட்டு நாள்
1. Pre K Karthika Sathishkumar
2. Pre K Ramyadevi Sriram
13.Grade 4B - Vijayaprabha Rajendran
14.Grade 4B - Santhi Deepak


BKM DAY 2026
CHERS APPRECIATION DAY|ஆசிரியர்


BKM DAY 2026
TEACHERS APPRECIATION DAY -ஆசிரியர் பாராட்டு நாள்
Primary Teachers
Aswini Sivakumar
Shobana Ganesan
BKM Tamil School-KatyEast


TION DAY|ஆசிரியர் பாராட்டு
நாள்


BKM DAY 2026
TEACHERS APPRECIATION DAY -ஆசிரியர் பாராட்டு நாள்



ராஜி வாஞ்சி (குறிஞ்சி பூத்த வேலி நூலிலிருந்து) ஹூஸ்டன், டெக்சாஸ்.

கார்காலத்திற்கு கட்டியம் கூறியபடி கருமேகம் சூழ்ந்தது. கானமயில் தோகை விரித்து பேடையை தேடி ஓடியது. நுண்ணிய வேலைப்பாடு கொண்ட பொன் ஆபரணங்ள் பெண்களின் கூந்தலில் சரம் சரமாக நீண்டு அலங்கலரிப்பது போல, வனமெங்கும் புத்தம் புது சரக்கொன்றை மலர்கள் பொன்னிறமாக பூத்துக் குலுங்கத் தொடங்கியது. வண்டுகளின் ஆர்ப்பரிப்பும் ரீங்காரமும் காட்டின் மோனத்தை கலைத்து விளையாடியது. மழைக்காலம் தொடங்கும் முன்னர் வீடு திரும்புவேன் என்று சொல்லி சென்றான் தலைவன்.



மழைக் காலத்திற்கான அடையாளங்கள் காட்டில் தெரியத் தொடங்கின.

மங்கை மனம் கலங்கவில்லை. பருவம் முந்திக்கொண்டு விட்டது. உண்மையான மாரிக்காலம் தொடங்கவில்லை, என் தலைவன் பொய் உரைக்க மாட்டான். அவன் விரைவில் வருவான் என்று கூறுவதாக அமைந்துள்ள பாடல். அவளுக்கு அவன் மேல் உள்ள நம்பிக்கையையும் அவர்களின் அன்பின் உயர்வையும் காட்டும் பாடல்.

கானகம் மெல்ல
மோனம் கலைத்தது
வானம் வழங்குமழையால்
பேண பெய்யுமுன்

கருமுகில் கனைக்க - எழில்
உரு மயில் தோகை விரித்து
பேடை தேடிட ..
சாடையாய் குயிலும்
சன்னமாய் கூவ - சர
மின்னலும் சடுகுடு ஆட
தூறலும் சுரம் சேர்க்க
சாரலோ துகில் பரப்ப
தூரத்து காட்டருவி ..
ஓரமாய் ஒலித்து நிற்க ..
ஊர் வரை உரைத்தது
கார்கால கட்டியம்.

வாசமலர் தூது கண்டு
நேசனாய் வண்டினங்கள் - சரக்
கொன்றையினை
சென்று சென்று மோத
நின்றதொரு வனம் தேவதையாய்.

நீருண்ட மேகமென
சீருண்ட முல்லைமகள் கூந்தலிலே
இசையோடு இடையிடையே நடமாடும்
பொன்மணிகளாய் தோன்ற
அன்றலர்ந்த செண்டுகளாய்
கொன்றையது குலுங்க .
பசுந்தழை நடுவே
அசைந்தாடும் மலர்க்கொன்றை
மழைக்காலம் வந்ததென
சளைக்காமல் சொன்னாலும் - ஓர்
இழையேனும் என் சகியே
நம்பவில்லை நான் அதையே

வம்புடனே முந்தியதே பருவமது
எந்நாளும் என்னவனும்
தன்னாலே பொய்யுரையான்
விண்ணதுவும் விரைந்து
தன்னிலை மாறி தந்ததுவே
தருமழையை ..தயக்கமில்லை
பொறுத்திடுவேன் தலைவன் காண.

மூலப்பாடல்:
குறுந்தொகை_21
வண்டு படத் ததைந்த கொடி இணர் இடையிடுபு,
பொன் செய் புனை இழை கட்டிய மகளிர்
கதுப்பில் தோன்றும் புதுப் பூங்கொன்றை,
கானம் கார் எனக் கூறினும்,
யானோ தேறேன்,
அவர் பொய் வழங்கலரே.
பாடியவர்: ஓதலாந்தையார்.



பறை இசைக்கருவியும் தமிழரின் வாழ்வியலும்

நித்யா

'பறை' என்பது தமிழர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகிற்கும் ஒரு ஆதி இசைக்கருவியாகக் கருதப்படுகிறது. எளிய விவசாயச் சமூகங்களால் இரண்டு குச்சிகளைக் கொண்டு இசைக்கப்படும் இக்கருவி, அவர்களின் வாழ்வின் இன்ப-துன்பங்களில் பங்கேற்றதுடன், கொண்டாட்டங்களின்போது மக்களை ஒன்றிணைக்கவும் உதவியது.விவசாயத்திற்குப் பயன்பட்ட கால்நடைகள் இறந்த பிறகும், அவற்றின் தோல்களுக்கு 'பறை' ஒரு புதிய வாழ்வை அளித்து, சமூகத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் கருவியாக அவற்றை மாற்றியது.

கடுமையான தாளக் கட்டமைப்புகளோ அல்லது முறையான இசை ராகங்களோ இன்றி இயங்கும் கருவி இது; மாறாக, முறையான இசை இலக்கணம் அறியாத சாதாரண மக்கள், இயற்கையோடு இயைந்த ஒலிகளின் அடிப்படையில் இதற்கான தாளங்களை உருவாக்கினர். தனித்து இசைக்கப்படும்போதும் 'பறை' தனது தனித்துவமான தன்மையை நிலைநிறுத்துகிறது. 'பறை'யின் பல்வேறு வடிவங்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல், ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளிலும் காணப்படுகின்றன. கலாச்சார வேறுபாடுகளுக்கு அப்பால், 'பறை'க்கும் 'போங்கோ' (Bongo) போன்ற இசைக்கருவிகளுக்கும் இடையிலான ஒற்றுமைகள், உலகம் முழுவதும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன.

செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டிருந்தாலும், 'பறை' பெரும்பாலும் விளிம்புந் சமூகங்களால் இறுதிச் சடங்குகளின்போது இசைக்கப்படும் கருவியாகவே பார்க்கப்படுகிறது. இருப்பினும், தமிழ் கலாச்சாரத்தில் மரணமும் வாழ்வின் கொண்டாட்டச் சுழற்சியின் ஒரு பகுதியாகவே கருதப்படுவதால், 'பறை' இசை மக்கள் தங்கள் துயரங்களை மறந்து அதன் தாளத்திற்கு ஏற்ப நடனமாடத் தூண்டுகிறது. ப்படுத்துகின்

'பறை' இசை என்பது கல்வி அறிவற்ற சாமானிய மக்களுக்கானதாகக் கருதப்படுவதால், அதைக் கற்றுக்கொள்வதற்கு முறையான பாடப்புத்தகங்களோ

அல்லது விதிகளோ இல்லை; மேலும் இது கல்வி அறிவற்ற சாமானிய ஏழை மக்களால் வாசிக்கப்பட்டதால் மேல்தட்டு மக்கள் இதைக் கற்றுக்கொள்வதில் ஒருவிதத் தயக்கமும் சமூக முத்திரையும் நிலவுகிறது. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் பறையைத் தயாரித்து இசைப்பவர்களாக இருந்தனர். காலப் போக்கில் பறையை இசைக்கும் கலைஞர் களின் எண்ணிக்கை குறைந்ததால், போதிய ஆதரவின்மையின் காரணமாக இது வழக்கொழிந்துபோகும் நிலையை எட்டிய ஒரு காலகட்டமும் இருந்தது. இன்றைய நவீன காலத்தில் எதையும் கற்றுக்கொள்வதில் எந்தவிதமான சமூகத் தடைகளோ அல்லது கலைஞர்களிடையே சாதி வேறுபாடுகளோ இல்லை. திறமைக்கு எப்போதும் நல்ல வரவேற்பு உண்டு. இந்தியாவில் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதார நிலையில் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால், பறையை வாசிக்கும் புதிய தலைமுறைக் கலைஞர்கள் அதனை ஒரு முறையான கலையாக வடிவமைத்து மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கத் தொடங்கியுள்ளனர். தற்போது இசைக்கருவிகள் விற்கும் கடைகளில் பறை கிடைப்பதுடன், மக்களின் தேவைக்கேற்ப இணையம் வழியாகவும் அதைக் கற்றுக்கொள்ளும் வசதிகள் உள்ளன.

ஹூஸ்டன் போன்ற நகரங்களில் பறைக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது; அமெரிக்காவில் வாழும் புலம் பெயர் தமிழர்களின் கலாச்சார அடையாளமாக இது பரவலாகக் கற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. திருமணங்கள் மற்றும் இந்தியக் கலாச்சார நிகழ்வுகளில் அமெரிக்கப் பிரமுகர்களைக் சிகளில் வாசிக்கப்படுகிறது. வேகமாக இயங்கும் இன்றைய உலகில், பறை இசை புதிய உற்சாகத்துடனும் புத்துணர்ச்சியுடனும் நம்மை மகிழ்விக்கவும், ஒரு கலாச்சார அடையாளமாகவும் உருவெடுத்துள்ளது. இந்தத் தொன்மையான இசைக்கருவியைக் கற்றுக்கொள்வதன் மூலமும், இந்தக் கலைக்குரிய உரிய மரியாதையை அளிப்பதன் மூலமும், வரும் காலங்களிலும் இதற்கு நம் ஆதரவை வழங்குவோம்.



அமர்நாத்

உன்னைப் பார்க்கையில் பயமாக இருக்கிறது!
எதை கேட்டாலும் உடனே சொல்கிறாய்;
சில சமயம், நான் நினைக்கத் தொடங்கும் முன்பே சொல்லிவிடுகிறாய்!
மனிதனால் முடிந்தவை அனைத்தையும் செய்கிறாய்;
மனிதனால் செய்யவே முடியாத அதிசயங்களையும் நிகழ்த்துகிறாய்!
பலரின் சாதனைகளில் பக்கபலமாய் நின்று பங்கெடுக்கிறாய்;
சிலரின் சாபக்கேடான வீழ்ச்சியிலும் வெட்கமின்றி முகம் காட்டுகிறாய்!
நீ மனிதன் உருவாக்கிய புதிய கடவுள்!
ஆனால், அதே கடவுள் படைத்த இயற்கையை அழிக்கும் அரக்கனும் நீயே!
AI... நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய், பயமாய் இருக்கிறது!





திப்பு சுல்தானின் புதையல் தடத்தில்

செந்தில் சுப்ரமணியன்

நான் வேலை விசயமாக இங்கிலாந்து சென்றிருந்த போது, என் வசிப்பிடத்துக்கு அருகாமையில் இயற்கை ஆய்வாளர் சார்லஸ் டார்வின் பிறந்த ஊரான ஷ்ரூஸ்பரி (Shrewsbury) இருப்பதை கேள்விப்பட்டு அதைக் காணும் ஆவலுற்றேன். ஒரு ஒருநாள் பயணத்தை திட்டமிட்டு ஷ்ரூஸ்பரி குறித்து இணையத்தில் தகவல் சேகரித்தேன். அச்சமயம் ஷ்ரூஸ்பரி அருகில் உள்ள போவிஸ் கோட்டையில் (Powis கேஸ்லே) திப்பு சுல்தானின் சில பொருள்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதாக தெரியவந்தது, இதனால் என் ஆர்வம் இரட்டிப்பானது — உடனே கிளம்ப வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது.

ஒரு வார எல்லை விடுமுறையில், எல்ஸ்மியர் போர்ட் (Ellesmere Port) நகரிலிருந்து பழம்பெரும் ரோமானியக் கோட்டை நகரான செஸ்டர் (Chester) வழியாக ரயிலில் ஷ்ரூஸ்பரி சென்றேன். காலை சுமார் ஒன்பது மணிக்கு ஷ்ரூஸ்பரி வந்தடைந்து, டார்வின் பற்றிய விவரங்களை அங்கிருக்கும் தகவல் மையத்தில் சேகரித்தபின், அருகிலுள்ள டார்வின் நினைவு நூலகத்தையும், நகரின் பழைய கோட்டை வாயில்கள் மற்றும் மதில்களின் எச்சங்களையும் பார்வையிட்டேன். ஆனாலும் என் மனம் திப்புவின் புதையலின் பக்கமே ஓடிக்கொண்டிருந்தது. அதனால், போவிஸ் கோட்டைக்கு விரைந்து சென்று பார்த்துவிட்டு, ஷ்ரூஸ்பரியின் மீதி பகுதியை மதியத்திற்குப் பிறகு பார்க்கலாம் என முடிவெடுத்தேன்.

போவிஸ் கோட்டைக்கு அருகிலுள்ள பேருந்து நிறுத்தத்திற்குச் செல்லும் பேருந்துகள் மிகவும் அரிதாகவே ஓடுகின்றன. கொஞ்ச நேரம் காத்திருந்த பின் ஒரு பேருந்து வந்தது. ஷ்ராப்ஷயர் (Shropshire) மற்றும் போவிஸ் பகுதிகள் வழியாக நடைபெற்ற அந்தப் பயணம் அபூர்வமானது — 'தி லார்ட் ஆஃப் தி ரிங்ஸ்' திரைப்படத்தில் வரும் ஹாபிட் (ஹாபிட்) வாழும் ஷையர் (the Shire) நிலப்பரப்பை நினைவூட்டியது.

கோட்டையை நோக்கி நீண்ட தூரம் நடக்க ஆரம்பித்தேன். இளங்காலநிலை கொண்ட பிரிட்டனில் கூட — அது ஜூன் மாதம் என்றாலும் — சுமார் இரண்டு கிலோமீட்டர் நடையில் நன்றாக வியர்த்தேன். இறுதியில் போவிஸ் கோட்டை கண்முன் தோன்றியபோது, அது மூச்சடைக்கும் காட்சியாக இருந்தது: மலைமீது சிவப்பு மணற்கல் சுவர்களுடன் நிமிர்ந்து நிற்கும் கோட்டையும், நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த அதன் தளவரிசைத் தோட்டங்களும்.

க்ளைவ் அருங்காட்சியகத்தின் உள்ளே

மலை உச்சியில், பொதுமக்களுக்குத் திறந்திருந்த ஆனால் இன்னும் தனியார் உரிமையிலேயே இருக்கும் இரண்டு மாடி அருங்காட்சியகம் இருந்தது. திப்பு

சுல்தானின் பொன் புலித் தலை முகப்பு, வாள்கள், காலணிகள், ஆகியவற்றை புகைப்படம் எடுக்க அனுமதி இல்லை. இரண்டு அலங்கார புலித்தலை பீரங்கிகள் கோட்டை வாயிலை நிறுத்தப்பட்டு இருந்தன. அவற்றின் நுணுக்கமான வேலைப்பாட்டைப் பார்த்து ரசித்து அவற்றுடன் புகைப்படம் ஏடுத்துக்கொண்டேன். அவை இங்கே. திப்புவின் அரச ஆயுதக்கிடங்கில் இப்படிப்பட்ட புலித்தலை பீரங்கிகள் சுமார் 200 மட்டுமே தயாரிக்கப்பட்டன என்றும், அவை போருக்கானவை அல்ல, வெறும் அலங்கார நோக்கம் கொண்டவை என்றும் பின்னர் அறிந்துகொண்டேன்.

தோட்டங்கள்

கோட்டைக்கு அருகில் ஒரு அழகான காஃபி விடுதி இருந்தது; அங்கு பாரம்பரிய பிரிட்டிஷ் கேக்குகளும் சாண்ட்விச்களும் சாப்பிட்டேன். பின்னர் தோட்டங்களைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினேன் — அவை அருங்காட்சியகத்திற்கு எந்த வகையிலும் குறையாத அளவு மறக்க முடியாதவையாக இருந்தன. புகழ்பெற்ற இத்தாலிய பாணித் தளவரிசைகள் (Italianate terraces) 1680களில் அமைக்கப்பட்டவை — அதாவது கோட்டையை விட இளையவை என்றாலும், சுமார் 340 ஆண்டுகள் பழமையானவை.

கத்தரிக்கப்பட்ட ஈயூ (yew) மரங்களால் ஆன வேலிகள் சுமார் முப்பது அடி உயரம் வரை உயர்ந்து, நூற்றாண்டுகளாக செதுக்கப்பட்டு, மலைச்சரிவில் தொங்குவது போன்ற பெரிய பச்சை சுவர்களாகக் காட்சியளிக்கின்றன — ஒரு ஓவியத்தில் இருந்து வெளிவந்தது போல. சிலைகள், குடங்கள், ஆரஞ்சு மரத் தோட்டங்கள் (orangeries) ஆகியவை ஒவ்வொரு தளத்திலும் இடம்பெற்றுள்ளன; அங்கிருந்து பார்க்கும்போது செவர்ன் பள்ளத்தாக்கு (Severn Valley) வரை பரந்து விரிந்திருக்கும் வயல்வெளிகள் தெரிகின்றன. ஒவ்வொரு தளமாக இறங்கிச் சென்றது, வெவ்வேறு நூற்றாண்டுகளின் ரசனையின் வழியாக நடப்பது போன்ற உணர்வைத் தந்தது — மேலே கட்டுக்கோப்பான வடிவமைப்பும், கீழே செல்லச் செல்ல இன்னும் இயற்கையான, கவித்துவமான தோற்றமும். இந்தத் தோட்டம் ஏன் பிரிட்டனின் சிறந்த தோட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது என்பது எளிதில் புரிந்தது.

திரும்பிய பயணம்

களைப்புடன் ஆனாலும் மனநிறைவுடன், திரும்பும் பேருந்திற்காகச் சென்று, மாலை ஐந்தரை மணிக்கு மீண்டும் ஷ்ரூஸ்பரி வந்தடைந்தேன். பேராலயத்தைப் பார்க்கச் சென்றேன், ஆனால் அது அப்போதைக்குள் மூடப்பட்டிருந்ததால், வெளியிலிருந்துதான் பார்க்க முடிந்தது. ஷ்ரூஸ்பரியிடம் விடைபெற்றுக்கொண்டு, செஸ்டரை நோக்கித் திரும்பினேன்.



என்னைப்பிடித்த பிடி!

செல்வி நந்து



காலை எழுந்ததும்
கண் திறக்காமலே
கைகள் மட்டும் தேடும்
என் உயிர் ஜீவன் ....

பல்விளக்க நேரமில்லை,
காபியைத்தேடி ஓடவுமில்லை,
ஒரு நொடி கூட பிரியாமல்
என்னோடு சிணுங்குகிறான்

அகிலத்தின் மறுமுனையில்
உறவுடன், நட்புடன்,
கதைக்கும்போதும்
கைக்குள்ளே அவனிருக்கின்றான்

இன்று
கட்டியவன் கூறுவது காதில் விழவில்லை ...
பிள்ளைகளின் மழலையும்
மனதை ஈர்க்கவில்லை ...
வெளியாடும் மழையும்
என்னிதயத்தை இலகுவாக்கவில்லை ...

முதலில் உதவ வந்தான்...
இன்று முழுதாய் என்னை தன்வசப்படுத்தினான் ...
தன் சிறு திரையில்
உலகை ஆட்கொண்ட இக்கைபேசி .....



புலம்பெயர்வு

வாஞ்சிநாதன் கோவிந்தராஜன் , கேட்டி, டெக்ஸாஸ் மாநிலம்

வறுமை தின்று
வியர்வை குடித்து
அறிவு உரத்தில் விளைந்த
குடிசைச் செடி

பணத்தைப் பரப்பி
குளிரில் நனைந்து
கான்கிரீட் மலையில் வளர
புலம்பெயர்ந்து போனது

காலமோ
காற்றின் திசையோ தெரியாத
ஞான இருட்டின் சூழலில்
சுற்றி வளரும்
அன்னியச் செடிகளின்
புரியாத மொழி கேட்டு
தெரிந்த மொழியும்
மறந்து போனது

பிரிந்து வந்த
உறவுகளின் நினைவுகள்
பருவகால மாற்றங்களில்



இலைகளாய் உதிர்ந்து விழ
பெயர்ந்து வந்த
சகச் செடிகளின் நட்புகளை
நினைவுகளாக மாற்ற முயல்கிறது

சொந்த மண்ணில்
மடிகனக்க படியளந்த நிலமோ
வடிவிழந்து தரிசாகி
மலடாகி முடங்கிக் கிடக்கிறது

கறவை வாசம் தேடி
காளை வந்து விழுந்து
களவின் அழகினை ரசித்த ஏரி
காய்ந்த மீனைக் கவர
ஆகாயத்தில் அலையும் கழுகின்
காமத்தைக் கண்டு
தினம் பிணம் சுமக்கிறது

வாசுகி இறைத்த வாளியும்
வாண்டுகள் எறிந்த சில்லறையும்
நீந்தி விளையாடிய கிணறுகள்
நீர் வறண்டு
தூர்வாராமல் துவண்டு கிடக்கிறது

மண்ணை மறந்து
விண்ணை நோக்கி வளர
கண்ணைக் கட்டிக் கொள்கிறது
தன்னைச் சார்ந்தவர் படும்
துயரங்களைக் காண சகிக்காமல்

புலம்பெயர்ந்து வந்தவரின்
புலம்பல் பூக்கள் பூத்திருக்கிறது
செடியெங்கும்



ஆசிரியர்: கீதா குஞ்சரமனோகரன்



"நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்!
நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்!"

அம்மா ஆனந்தி, நிகழ் நிலையில் (ஆன்லைன்) யோகா செய்து கொண்டிருந்தாள். மகள் வானதி சோர்வான முகத்துடன் வீட்டிற்குள் நுழைந்தாள்.

யோகா முடிந்ததும் வானதியை சாப்பிட அழைத்தாள். அவள் மறுத்து விட்டு படுக்கைக்கு சென்றுவிட்டாள். சாப்பாடு என்றால் எப்பொழுதும் முயல்குட்டி போல் குதித்து வரும் வானதி இன்று நடந்து கொண்ட விதம் ஆனந்திக்கு வருத்தம் தந்தது. அவள் தூங்கி எழுந்ததும் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டு, தன்னை சமாதானம் செய்து கொண்டாள், ஆனந்தி.

விடிந்ததும் வானதி எழுந்து, தன்னுடன் யோகா செய்ய சேர்ந்துகொண்டது ஆனந்திக்கு வியப்பைத் தந்தது. "நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்!

நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்!" என்று சொல்லும் பொழுதே வானதியின் கண்களில் இருந்து கண்ணீர் அருவி போல் கொட்டியது. அவளே பேச ஆரம்பித்தாள். "அம்மா! நான் குண்டாக இருப்பதை சொல்லி சிரிக்கின்றனர்" என்று அழுதாள். அம்மாவுக்கு பிரச்சனை புரிந்தது.

காலை சாப்பாட்டை வானதி கொரித்துக் கொரித்து சாப்பிட்டாள். வானதி சாப்பிட்டு முடித்ததும் ஆனந்தி அவளிடம் செய்தித்தாளைத் தந்து ஒரு குறிப்பிட்ட செய்தியை படிக்கச் சொன்னாள். "மாற்றுத்திறனாளி சாதனை" என்ற தலைப்புடன் அந்த செய்தி ஆரம்பித்தது.அந்த மாற்றுத்திறனாளியின் அம்மா ஒரு தூய்மைப் பணியாளர். தன் மகன் கால் ஊனமாக பிறந்ததை நினைத்து ஒதுக்காமல், அவனை நன்றாக படிக்க வைத்தாள். அவனும் தாயின் நம்பிக்கையை சிதைக்காமல் இந்திய ஆட்சிப் பணி(IAS) தேர்வில் தேர்ச்சி பெற்று, IAS பதவியில் அமர்ந்தான்.

இந்த செய்தியைப் படித்ததும் குண்டாக இருப்பதைக் குறையென நினைப்பதே குறை; தன்னைத்தான் ஏற்றுக்கொண்டு உயர்ந்த குறிக்கோளை எண்ணி பயணிப்பதே மனிதனின் நிறை என்பதை புரிந்து கொண்டாள்.

தமிழ் மொழியின் சிறப்புகள்

தமிழ் உலகின் தொன்மையான செம்மொழிகளில் ஒன்றாகும்.
தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய வரலாற்றைக் கொண்டது.
தமிழ் மொழியின் தொன்மையைப் பறைசாற்றும் சிறந்த இலக்கியமாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன.
திருக்குறள் உலக மக்களுக்கு அறம், பொருள், இன்பம் ஆகிய வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கிறது.
இயல், இசை, நாடகம் என முத்தமிழாகத் தமிழ் மொழி சிறந்து விளங்குகிறது.
தமிழ்மொழி இனிமையும், இலக்கிய வளமும், இலக்கணச் சிறப்பும் நிறைந்தது.
தமிழைக் காப்போம்! தமிழில் பேசுவோம்! தமிழின் பெருமையை உலகெங்கும் பரப்புவோம்!



கவின்: “செல்போனும் நிஜ உலகமும்”

நீதி: நிஜ உலகோடு கூடி வாழ்வதே உண்மையான மகிழ்ச்சி.

பெயர்: ஹஸ்மித் கோபி ஆசிரியை பெயர்: திருமதி. ரங்கா பாண்டுரங்கன், வகுப்பு: 7



ஒரு அழகான கிராமத்தில் கவின் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் எப்போதும் தன் அப்பாவிடம் செல்போன் கேட்டு விளையாடிக்கொண்டே இருப்பான். சாப்பிடும் போது, படிக்கும் போது, ஏன் தூங்கச் செல்லும் போது கூட அவன் கைகளில் செல்போன் தான் இருக்கும். மாலை நேரத்தில் வெளியே சென்று தன் நண்பர்களுடன் விளையாடுவதை முற்றிலுமாக நிறுத்திவிட்டான்.

ஒரு நாள் மாலை, கவின் வழக்கம்போல் தன் வீட்டு வாசலில் அமர்ந்து செல்போனில் கேம் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று வானத்தில் அழகான பல வண்ணங்களில் ஒரு அபூர்வப் பறவை பறந்து வந்து அருகில் இருந்த மரக்கிளையில் அமர்ந்தது. அது இனிமையாகப் பாடியது. தெருவில் இருந்த மற்ற குழந்தைகள் அனைவரும் ஓடிவந்து அந்தப் பறவையைப் பார்த்து மகிழ்ந்தனர்.

ஆனால், கவின் செல்போன் திரையை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்ததால் அந்த அழகிய பறவையையோ, அதன் பாட்டையோ கவனிக்கவே இல்லை. சிறிது நேரத்தில் அந்தப் பறவை பறந்து சென்றுவிட்டது. மற்ற குழந்தைகள் அதைப் பற்றி சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்ட கவின், தான் ஒரு சிறந்த காட்சியைத் தவறவிட்டுவிட்டோமே என்று வருந்தினான்.

அப்போது அவனது தாத்தா அவனிடம் வந்து, "கவின், இந்தச் செல்போன் உலகத்தில் உள்ள பல விஷயங்களை நமக்குக் காட்டும் ஒரு நல்ல கருவிதான். ஆனால், அதுவே நம் நிஜ வாழ்க்கையையும், நம்மைச் சுற்றியுள்ள அழகான தருணங்களையும் பார்க்க விடாமல் தடுத்துவிட்டால் அது ஆபத்தானது. திரைக்கு வெளியே ஒரு பெரிய அழகிய உலகம் இருக்கிறது," என்று அன்பாகக் கூறினார்.

தாத்தா சொன்ன தன் உண்மையைப் புரிந்துகொண்ட கவின், உடனே செல்போனை ஓரமாக வைத்தான். அன்றிலிருந்து செல்போன் பயன்படுத்தும் நேரத்தைக் குறைத்துக்கொண்டு படிப்பிலும், நண்பர்களுடன் வெளியே ஓடிப்பிடித்து விளையாடுவதிலும், இயற்கையை ரசிப்பதிலும் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினான்.

நீதி: செல்போன் பயன்பாடு அளவிற்கு மீறினால், நம் நிஜ வாழ்க்கையின் அழகான தருணங்களை நாம் இழக்க நேரிடும். தொழிற்கல்விக் கருவிகளைத் தேவையான நேரத்திற்கு மட்டும் பயன்படுத்தி, நிஜ உலகோடு கூடி வாழ்வதே உண்மையான மகிழ்ச்சி.



யானையும் எலிகளும் ஒற்றுமையின் வலிமை

பிரியா

ஒரு பெரிய காட்டில் பல யானைகள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டின் அருகில் ஒரு சிறிய எலிக் கூட்டமும் வசித்து வந்தது.

ஒருநாள் யானைகள் தண்ணீர் தேடி செல்லும்போது, எலிகளின் இருப்பிடத்தின் வழியாகச் சென்றன. அதனால் பல எலிகளின் வீடுகள் சேதமடைந்தன.

எலிகளின் தலைவர் யானைகளிடம் சென்று, "நாங்கள் சிறியவர்கள். எங்களால் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லை. தயவுசெய்து எங்கள் இருப்பிடத்தைத் தவிர்த்து செல்லுங்கள்," என்று கேட்டுக்கொண்டது.

யானைகளின் தலைவர் இரக்கத்துடன், "சரி. இனிமேல் நாங்கள் கவனமாகச் செல்கிறோம்." என்று வாக்குறுதி அளித்தது.

சில நாட்களுக்குப் பிறகு வேட்டைக்காரர்கள் யானைகளைக் பிடிக்க பெரிய வலைகளை விரித்தனர். யானைகள் அந்த வலையில் சிக்கிக்கொண்டு வெளியே வர முடியாமல் தவித்தன.

அப்போது எலிகளுக்கு யானைகளின் துயரம் தெரிந்தது. உடனே நூற்றுக்கணக் கான எலிகள் ஒன்றாகச் சேர்ந்து, தங்கள் கூர்மையான பற்களால் வலைகளை கடிக்கத் தொடங்கின.

சிறிது நேரத்தில் வலைகள் அறுந்தன. யானைகள் விடுதலை பெற்றன.

யானைகளின் தலைவர் மகிழ்ச்சியுடன், "நீங்கள் சிறியவர்கள் என்றாலும், உங்கள் ஒற்றுமையும் உதவும் மனமும் மிகப் பெரியது!" என்று கூறியது. அன்று முதல் யானைகளும் எலிகளும் நல்ல நண்பர்களாக வாழ்ந்தன.

கதை சொல்லும் நீதி:

"ஒற்றுமையாக இருந்தால் சிறியவர்களாலும் பெரிய உதவிகளைச் செய்ய முடியும்." - ஒற்றுமையே பலம்!



ஆசிரியர் - மணிகண்டன் ஜவஹர்லால்



ஆண்டு 2148

வழக்கம் போல் காலை 5.45 மணிக்கு எல்லாம் அவன் எழுந்து விட்டான்.

படுக்கையில் இருந்து எழ மனமில்லாமல் புரண்டு புரண்டு படுத்தான். அவன் மனதில் பல விஷயங்கள் ஓடத் தொடங்கின. இன்று செய்ய வேண்டிய பல வேலைகள் அவனுடைய மனது அசைபோட்டது. முக்கியமான சில விஷயங்களை இன்றே முடிக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டான்.

அப்பொழுது அவனுடைய கைபேசி விழிப்பொலி மெதுவாக ஒலிக்கத் தொடங்கி அதனுடைய சத்தம் விரிவடைந்தது. உடனடியாக எழுந்து விழிப்பொலியை நிறுத்திவிட்டு சற்று அவன் சோம்பல் முறித்தான்.

அனைத்து காலை கடன்களையும் முடித்துவிட்டு மிடுக்கான உடைகளை அணிந்து கொண்டு தொலைக்காட்சி உள்ள அறைக்கு வந்தான். தொலைக் காட்சியை ஒளிபரப்ப ஆணையிட உடனே தொலைக் காட்சி ஒளிபரப்ப தொடங்கியது. அதில் இன்றைய காலை செய்திகளை கேட்டுக்கொண்டே அவனுடைய காலை உணவை குளிர்சாதனப்பெட்டியில் இருந்து எடுத்து உண்ணலானான்.

இரண்டு மூன்று செய்திகளை கேட்டுவிட்டு சாலை நிலவர செய்தி ஒளிபரப்ப வார்த்தை கட்டளை இட தொலைக்காட்சியில், காலை நிலவர சாலை செய்திகள் ஒளிபரப்பாகின.

இதற்கு இடையில் அவனது காதில் யாரோ தன்னை தொடர்ந்து அழைத்துக் கொண்டிருப்பது மந்தமாக விழுந்தது. ஆனால் அவன் அதை சட்டை செய்யாமல் அலுவலகத்திற்கு புறப்பட்டான். அவனது அலுவலக நண்பரும் அவனுக்காக காத்தி ருக்க, இருவரும் வான்மிதவையில் ஏறி பயணிக்க லானார்கள். கடைசியாக 5 நிமிடங்களுக்கு முன் அவர்கள் அலுவலகம் அடைந்தனர்.

உள்ளே நுழைந்தவுடன் அவன் தனது அலுவலக சந்திப்புகளில் சேரலானான்.

பிறகு அடுத்தடுத்த அலுவலக சந்திப்புகளை நேர்கொள்ளலானான். அப்பொழுது காலை மணி 11 இருக்கும் .. அப்பொழுது அவனுடைய கைபேசி மீண்டும் அழைத்தது .

கைபேசியை எடுத்து அவன் பேச ஆரம்பித்தான்

"சொல்லும்மா"

மறுமுனையில்

"எப்ப வருவீங்க? எப்ப வருவீங்க?"

மறுநொடி மாறுகின்ற இந்த உலகத்தில் என்றுமே மாறாதது மனைவி மட்டும் தான்..!



நாய்க்கு கா(வ)ல்

ப்ரீத்தி

அது என்னங்க நாய்தானே காவல் காக்கும். நாய்க்கு காவலா?... நம் கதையின் திருப்பம் அப்படி!!

அன்று ஒரு நாள், சிறுவர் கூட்டம் ஒன்று முரட்டுத்தனமாக ஒரு சிறிய நாயைத் தாக்குவதை ஒரு சிறுமி கண்டாள். ஓடிப்போய் அதனைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் வந்துவிட்டாள். மிரண்ட விழிகளுடன் அப்பா, அம்மாவைப் பார்த்தாள். அவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், அதனை வீட்டிற்கு வெளியே வளர்க்க அனுமதித்தனர்.

அன்று முதல் சிறுமிக்கு கொண்டாட்டம். நாய்க்கு 'டாமி' என பெயர் சூட்டி மகிழ்ந்தாள். அப்பா அலுவலகம் சென்றதும், அவர் பெயர் பலகை இருக்கும் இடத்தில் 'டாமி வீடு' இருந்ததும்

அந்த சிறுமியின் கை வண்ணம் :)

அந்த நாயைக் குளிப்பாட்டி, சாப்பாடு போட்டு அன்புடன் பார்த்துக் கொண்டாள். அன்றும் டாமியய் தலைக்குமேல் தூக்கி வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். கை தவறி கீழே போட்டுவிட்டாள். நாயின் காலில் நல்ல அடி. அது வலியில் துடித்துக் கத்தியது.

சிறுமியின் பெற்றோர் ஓடிவந்து அதற்கு சிகிச்சை அளித்து கட்டுபோட்டனர். பிறகு அந்த நாய் நொண்டி நொண்டி நடக்க ஆரம்பித்தது. அதன் மேல் பரிதாபப்பட்ட பெற்றோர் அதனை வீட்டிற்குள் வளர்க்க ஆரம்பித்தனர். 'டாமி' வீட்டின் உறுப்பினர் ஆகிப்போனார். "ஆதார்" மட்டும்தான் இல்லை :)

நாயின் காலே அதற்கு காவல் ஆகிப்போனது!!

குட்டீஸ்! நாயுடன் விளையாடும்பொழுது கவனமாக விளையாடவேண்டும்.



அவள்

யார் அவள்? என்னவள்!
என் மன்னவள்,
என்னை வென்றெடுத்தவள்,
பெற்றோரோடு இளவரசியாக வாழ்பவள்,
என்னோடு மகாராணியாக வாழ இருப்பவள்
என்னவள், என் மன்னவள்.

- கிருஷ்ணராஜ் நாராயணன்



சார்... உங்கக் கையால்..!

ஆர்.எஸ். மணி

அன்று காலையிலேயே செட்டியார் டீக் கடையை பென்சனர்கள் கூட்டம் மொய்த்திருந்தது. கடை முதலாளி பணியாளர்களை விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தார். டீ மாஸ்டர் முன்னாலும், வடை மாஸ்டர் முன்னாலும் பென்சனர்கள் டோக்கன்களை நீட்டிக் கொண்டிருந்தனர். அவர்களது அவசரத்தை சட்டை செய்யாது வடைகள் பொன் முறுகலாகும் வரைக்கும் காத்திருந்து பின் வடைகளை கண்கள் கொண்ட பெரிய அகப்பையில் அள்ளி எண்ணெய் வடிய பெரிய சட்டியில் போட்டுக் கொண்டிருந்தார் மாஸ்டர்.

சூடாத் தாங்க... மாஸ்டர்" என்று பலர் கூப்பாடு போட்டாலும் காதில் வாங்காது எண்ணெய் வடிந்த பின் பெரிய பாத்திரத்தில் வடைகளை மலை போன்று கொட்டிக் குவித்து விட்டு வடை போடும் தனதுப் பணியைத் தொடர்ந்தார். அருகில் காத்து நிற்கும் பணியாளர் டோக்கன்களை வாங்கிக் கொண்டு சிறு பிளாஸ்டிக் தட்டுகள் மேலே இலைகளைப் போட்டு சூடான இரண்டு வடைகளையும் அதன் மீது சட்டினியையும் ஊற்றித் தர முயலும் போது கூட்டம் முண்டியடித்து அவரை நெருக்கும்.

ஐயோ...பக்கத்துல எண்ணெய் சட்டி கொதிச்சுக்கிட்டு இருக்கு.. அது மேலே விழுந்துராதீக..' என்று மாஸ்டர் பதறியடிச்சு அலறுவார். சத்தம் கேட்டு முதலாளி ஓடி வந்து பஞ்சாயத்து செய்வார்.

வடைத் தட்டைப் பெற்றுக்கொண்டவர்கள் முகத்திலோ இனம் புரியாத ஆனந்தம். கூட்டத்தில் நிற்காமல் தள்ளிப் போய் தனியே ஓரமாக நின்று சாப்பிடுவோரும் உண்டு. வடையைப் பிய்த்து சட்டினியில் தோய்த்து கண்களை மூடிய வண்ணம் அவர்கள் ரசித்து சாப்பிடும் அழகே அலாதிதான்.

அடுத்த மாத பென்சன் வரை நாவில் அந்த சுவை ஒட்டி இருக்குமோ என்னவோ? வேறு சிலர் அகவிலைப்படி அரியர்ஸ் பற்றி தேநீர் அருந்தியபடியே சக பென்சனர்களிடம் விசாரிப்பர். இன்னும் சிலர் நாட்டு நடப்பை அலசுவதுண்டு.

கந்து வட்டிக் கும்பலும் கடன்வாங்கிய பென்சனரை சந்தித்து வசூலிக்க கடைக்கு வருவதுண்டு. அங்கு சிக்காதவர்களை பேங்குக்குப் போய் சந்திப்பதும் நடக்கும். கையில் ஈட்டி இல்லாதது மட்டும் தான் குறை.

தனபால் சார் அப்போது அங்கு வந்தார். குள்ளமான உருவம். வழுக்கைத் தலை. பின் தலை முழுவதும் வெள்ளி(ளை)

முடிகள், வெள்ளை சட்டை, வேட்டி, தோளில் சிறிய துண்டு, கையில் குடை ஆகியவை தான் அவரது அடையாளங் கள்.



எப்பவும் எதையோ யோசித்த வண்ணம் இருக்கும் அவர் பக்கத்து ஊரில் ஆரம்பப் பள்ளி ஆசிரியராக 37 ஆண்டுகள் வேலை பார்த்து விட்டு பத்து ஆண்டுகளுக்கு முன் பணி ஓய்வு பெற்றவர்.

வடை, தேநீர் கூட்டங்களில் சிக்காமல் கனிந்த வாழைப்பழம் ஒன்றை மட்டும் வாங்கி சாப்பிட்டு விட்டு கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் ஆனதை உணர்ந்து வங்கியை நோக்கி வேகமாக நடந்தார்.

டீக் கடையிலிருந்து ஒரு எட்டுத் தூரத்தில்தான் பென்சனர்களுக்குப் படியளக்கும் நகரத்தின் பெரிய வங்கி இருந்தது. பத்து மணிக்குப் பத்து நிமிடம் முன்பே வங்கியின் வாசல் திறந்துவிடும். அங்கும் வாசல் முன் கூட்டம் கும்பலாகக் கூடி நிற்கும்.

வாசல் திறந்ததுதான் தாமதம் ஓடோடி சென்று பணம் தரும் கவுண்டர்களுக்கு முன்போய் வரிசையில் நின்று கொள்வார்கள். தனபால் சார் வழக்கம் போல் டெல்லர் சிவாவின் கவுண்டர் முன்பு நின்று கொண்டார். சிவாவின் முழுப் பெயர் சிவசுப்பிரமணியன். அநேகமாக வயதானவர்கள் அவரது கையால் பென்சன் வாங்கவே விரும்புவார்கள். காரணம் விரைவாகப் பணம் பட்டுவாடா செய்வதோடு இன்முகத்துடன் அனைவரையும் நலம் விசாரிக்கத் தயங்கமாட்டார். கனிவான குரலில் இயல்பாக உரையாடும் அவரை யாருக்குத்தான் பிடிக்காது. பல பென்சனர்களின் குடும்ப சூழல் அறிந்தவர். அவர் வாடிக்கையாளர்களிடம் கோபித்ததே இல்லை. அவர் ஒருவர் தான் பல ஆண்டுகள் அந்த வங்கிக் கிளையில் பணி புரிபவர். யூனியன் செயலாளர் என்பதால் எப்பவாவது அவசரமாக மேலாளர் அழைக்கும் போது முன்னால் நிற்கும் வாடிக்கையாளரிடம் "ஒரு நிமிடம் ஐயா.. வந்து விடுவேன்.. என்று கூறும் போது எவரும் எரிச்சல் படுவதும் இல்லை.

மின்னல் வேகத்தில் திரும்பி ஓடி வந்து விடுவார் என்று அவர்களுக்கும் தெரியும். நிற்க முடியாமல் தவிக்கும் பென்சனர்களை அருகில் அழைத்து பணத்தைக் கொடுத்து உடனே அனுப்பி விடும் அவரது மனிதாபிமானம் அவருக்குப் பெரிய மரியாதையைத் தேடித் தந்தது.

சிவா சார் கவுண்டருக்கு வரும் வரையில் தனபால் சார் வங்கியை சுற்றுமுற்றும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தார். ஏராளமான அறிவிப்புப் பலகைகள் புதிதாக சுவர்களை நிறைத்திருந்தன.

இந்த இடத்துக்கு வங்கி வந்து எட்டு ஆண்டுகள் இருக்கும். அதற்கு முன் மாரியம்மன் கோவில் பக்கத்திலேயும் அதன் பின் அரசமரத்தடி அருகிலுள்ள சந்திலும் இருந்தது.

ஆசிரியர் வேலையில் சேர்ந்த புதிதில் மாரியம்மன் கோவில் பக்கமுள்ள கிளைக்கு சென்று பிக்சட் டெப்பாசிட் போட சென்ற போது, மேலாளர் (அப்போது ஏஜெண்ட் என்று பெயர்) தனது அறைக்கு அவரை அழைத்து அமர வைத்து காபி வாங்கிக் கொடுத்து உபசரித்ததை அவரால் இன்னும் மறக்க முடிய வில்லை. 50ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததை எண்ணிக் கொண்டிருக்கும் போதே சிவா கவுண்டருக்குள் பணப் பெட்டியுடன் நுழையும் சத்தம் கேட்டுத் திரும்பினார்.

சிவா தான் முதலில் விசாரித்தார்.

தனபால் சார்.. வாங்க.. நல்லா இருக்கீங்களா? அம்மாவுக்கு இப்பப் பரவாயில்லையா? நடக்க முடியுதா?"

பெரிசா முன்னேற்றம் தெரியல சார்... பென்சன் முழுசும் மருத்துவ செலவுக்கே சரியாகப் போகுது... என்ன செய்வது...? உங்களைப் பார்த்துப் பேசறப்போ என் கவலை.. வலி... எல்லாம் சற்று மறந்து போய் நிற்கிறேன்.'

"கவலைப்படாதீங்க... எல்லாம் சரியாகி விடும்.. உங்க நல்ல மனசுக்கு நல்லா இருப்பீங்க " என்று ஆறுதல் கூறி அவருக்கான பென்சன் தொகையினைக் கொடுத்து அனுப்பினார் சிவா.

பென்சன் தொகையை சரிபார்த்து தனது மஞ்சள் பையில் பத்திரமாக வைத்து க் கொண்டு, "அப்ப நான் வரட்டுமா சார்... " என்று சிவாவிடம் கூறி விட்டு வாசலுக்கு விரைந்தார். படியிறங்கியதும் வெயிலின் தாக்கத்தை உணர்ந்த தனபால் சார் குடையை விரித்து வீடு நோக்கி நடையைக் கட்டினார்.

மாரியம்மன் கோவில் பின் பக்கமுள்ள ஆர். வி. நகர் வங்கியிலிருந்து ரொம்பத் தூரம் இல்லை தான். இருந்தாலும் வெயிலில் நடப்பதும் சிரமமாக இருந்தது.

அறுபது வயது வரை சைக்கிளில் தான் எங்கும் செல்வார். ஒரு நாள் மணிக்கூண்டு பக்கத்தில் ஆட்டோ இடித்துக் கீழே விழுந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டு குணமாகி வீட்டுக்கு வர ஒரு வாரம் ஆயிற்று. சைக்கிளும் சேதமாகி ஓட்டும் நிலையில் இல்லை. குடும்பத்திலும் இனி சைக்கிள் எடுக்க வேண்டாம் என்று எச்சரித்த பின் எங்கு சென்றாலும் நட (டை)ராஜாதான்.

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது அவருக்கு மிகவும் பொருந்தி விட்டது. அவரது இணையரும் அதே பள்ளியில் ஆசிரியர் பணி செய்து வந்தார். வீட்டில் டியூசன் எடுப்பதும் உண்டு. ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரு குழந்தைகள்.

இருவர் சம்பாத்தியத்தில் ஆரம்பத்தில் செலவு போக மீதி இருந்தது. அதை பக்கத்தில் வங்கி இருந்ததால் அங்கு சேமித்துவந்தார். அக் காலம் தான் அவர்களின் பொற்காலம்.

பையனும் படிப்பில் சுமார் தான். மேற்படிப்புக்கு அனுப்பும் அளவுக்குத் தேற வில்லை. மணிக்கூண்டில் சர்ச் பக்கம் சிறு கடை வைத்துக் கொடுத்தார். பெரிய வருமானமில்லை. குடும்பத்திலும் ஒட்டு இல்லை. அவனே திருமணம் செய்து கொண்டு வெளியூர் போனவன் தான். அம்மாவுக்குப் பக்கவாதம் வந்து படுக்கையில் விழுந்த பின் கூட வந்து பார்க்க வரவேயில்லை. மகள் படிப்பில் சுட்டி. நல்ல இடம் வந்த போது படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு திருமணத்தை முடித்துக் கரையேற்ற வங்கியில் போட்ட டெப்பாசிட் பெரிதும் உதவியது.

தனபாலுக்கு வாழ்க்கை பெரும் சுமையாக மாறியது. வங்கிக்கும் பக்கத்து கடைக்கும் தவிர வேறெங்கும் செல்வது கிடையாது. இணையருக்கு அருகிலிருந்து கவனித்துக் கொள்வதே அவரது முழுநேரப் பணியாக மாறியது. வங்கிக்கு சென்று திரும்பும் வரையிலும் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் டீச்சரைப் பார்க்கும் படி சொல்லிவிட்டு வருவார்.

மணிக்கூண்டைத் தாண்டும் போது வெயிலின் தாக்கம் மேலும் கூடியது. துண்டால் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டும் கடந்த காலத்தை அசை போட்டுக்கொண்டும் நடந்தார்.

வீட்டு சூழல்தான் மாறியது என்றால் வங்கியிலும் எத்தனை மாற்றங்கள்... 50 ஆண்டுகளுக்கு முன்பு வங்கியில் கிடைத்த உபசரிப்பும் மரியாதையும் இனி கிடைக்காதா என்ற ஏக்கம் பெரு மூச்சாக வெளிப்பட்டது. வங்கியிலிருந்து அந்நியமானது போன்ற எண்ணம் மேலோங்கி நின்றது.இப்போது சிவா சாரின் பரிவும் கனிவான வார்த்தைகளுமே ஆறுதலாக.... பிடிமானமாக உள்ளது என்று எண்ணியவாறு வீட்டுக்குள் நுழைந்தார்.

வீல் சேரில் அமர்ந்திருந்த தனது மனைவியின் அருகில் ஈசி சேரில் சாய்ந்தபடி ஜன்னல் வழியே வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் தனபால் சார்.

ஆண்டுகள் ஆறு ஓடிவிட்டன. வீட்டு நிலைமை மேலும் மோசமாகி வருவதாக அவர் உணர்ந்தார். மறுநாள் பென்சன் வாங்கப் போகணும் மருந்துகள் வாங்கணும் என்ற நினைப்பில் அவர் கண்ணயர்ந்தார்.

பென்சன் வாங்க வங்கிக்குள் நுழையும் போதே வாசல் பக்கம் ஏதோ ஒரு மிஷினைப் பொருத்திக் கொண்டிருந்ததைக் கவனித்தார் தனபால் . வங்கியில் தினமும் ஒரு மாற்றம் நடந்து கொண்டிருந்தது. சிவா சாரிடம் மேலாளர் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

தனபால் சாரைப் பார்த்ததும் சிவா, " உங்களைத் தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன். பாஸ் புக்கும் பணம் எடுக்கிற ஸ்லிப்பும் தாங்க... " என்று வாங்கி பென்சன் தொகையைத் தந்து விட்டுக் கூடவே ஒரு பாரத்தைத் தந்து நிரப்பித் தருமாறு சொல்ல அவரும் ஒன்றும் புரியாது திகைக்க,

அய்யா.. இனிமேல் மிஷின் மூலம் பென்சனை எடுத்துக் கொள்ளும் வசதி வந்தாச்சு... வங்கிக்குள்ளே இனி வரணும்னு அவசியமில்லை. பாரத்தை நிரப்பி சைன் பண்ணிக் கொடுத்தா உங்களுக்கு ஒரு கார்டும் ரகசிய நம்பரும் தருவோம். அதை வச்சி வெளியே பணத்தை எடுத்துக்கலாம்." என்று சிவா சார் கொடுத்த விளக்கம் கேட்டு ஆடிப் போய் விட்டார். கண்கள் கலங்கிப் பிரமை பிடித்தவர் போல் அசைவற்று நின்றார். நா எழவில்லை. கை நடுங்கியது. கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் கொட்டியது.

துண்டால் துடைத்துக் கொண்டே," எப்பவும் போல உங்ககிட்ட வாங்க முடியாதா? கண்டிப்பா மிஷினில் தான் எடுக்கணுமா..? "என்று தழுதழுத்தவாறு கேட்டவுடன் சிவா சொன்ன பதில் இன்னும் தூக்கி வாரிப்போட்டது.

"அய்யா... பேங்கில் ஏகப்பட்ட மாற்றங்கள் கொண்டு வாறதை பார்த்துக் கிட்டு தானே இருக்கீங்க பேங்கை நவீனப் படுத்துறாங்க... இருக்கிற ஊழியர் பத்தாது... நானும் ரெண்டு மாசத்தில வெளியே போய் மிஷினில் தான் பென்சன் எடுக்கப் போறேன். ஆமா... அடுத்த மாசம் ரிட்டயராகிறேன் அய்யா... என்று

சொல்லவும் விக்கித்துப் போய் நின்றார் தனபால் சார்.

நிலைகுலைந்து நிற்கும் அவரை சரிந்து விடாமல் பின்னால் நின்ற சக பென்சனர் இருவர் பிடித்துக் கொள்ள, கேஷ் கவுண்டரைப் பூட்டி விட்டு சிவா வெளியே ஓடி வந்து தனபால் சாரின் கைகளைப்பற்றி அருகிலுள்ள பெஞ்சில் அமரச் செய்து விட்டுப் பேசலானார்.

ஐயா...டூ சொல்லட்டுமா? நானிருக்கும் போது ஏன் இவ்வளவு பதட்டம் ? மிஷின் மீது ஏன் இவ்வளவு பயம்?"

அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாத தனபால் சார் சற்று தயங்கியபடியே " ஏ டி எம் மிஷின்.. ரகசிய எண்ணைத் தவறாகப் பயன்படுத்தி பிராடுகள் நடக்கிறதைப் பத்தி பேப்பரில் போன வாரம் படிச்சேன் சார்... வாழ்க்கையில் ரொம்பவே நொடிச்சுப் போயிட்டேன். மேலும் இழப்புகளைத் தாங்கும் தைரியம் உடலுக்குமில்லை.. மனசுக்குமில்லை சார். என் கண் மூடும் வரைக்கும் உங்க கையாலதான் பென்சன் வாங்கணும் சார்..." என்று சொல்லித் தேம்பினார். கூட நின்றவர்களும் அழுது விடுவார்கள் போலிருந்தது.

அவ்வளவு தானே அய்யா... என் கையால் பென்சன் வேணும் இல்லையா?. நானே தருகிறேன். போதுமா? கவலைப்பட வேண்டாம்."

" எப்படி சிவா சார்?"

மாசா மாசம் நான் பென்சன் எடுக்க வரும் போது உங்களுக்கும் எடுத்துத் தாறேன்.. நீங்க என் அப்பா மாதிரி... இது கூட நான் செய்ய மாட்டேனா?"

"இப்ப தான் உசிரு வந்த மாதிரி நிம்மதியா இருக்கு. நீங்க குடும்பத்தாரோட நல்லா இருக்கணும்...! நான் வருகிறேன் மகனே.. " என்று சொல்லி உணர்ச்சி மேலிட குனிந்து நின்ற சிவாவின் தலை மீது கை வைத்து ஆசீர்வதித்தார். கண்களை மேல் துண்டால் துடைத்தபடி தனபால் சார் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த சிவாவின் கண்களும் கசிந்தன.



அப்பா

அப்பா என்றால் அன்பின் உருவம்,
என் வாழ்வின் அழியாத தீபம்.

வெயிலில் நின்று நிழல் தந்து,
தன் கனவுகளை மறந்து,
என் கனவுகளை நனவாக்கியவர்.

விழுந்தபோது கை கொடுத்து,
தோல்வியிலும் துணை நின்று,
துணிவின் அர்த்தம் கற்றுத் தந்தவர்.

அவரின் மௌனத்தில் ஆயிரம் வார்த்தைகள்,
அவரின் பார்வையில் அளவற்ற பாசங்கள்.

என் வாழ்வின் முதல் ஹீரோ,
என்றும் என் அப்பா



- பிரியா



ராமுவும் இரத்தக்காட்டேரியும்

ப்ரதிக் செந்தில் சுப்பிரமணியன்

ராமு ஐந்தாம் வகுப்பு படிக்கும் ஒரு சுட்டிப்பயல். டெக்சாஸ் மாகாணத்தில் ஃகேட்டி நகரத்தில் தன் பெற்றோருடன் வசித்து வந்தான்.

ஒருசமயம் கேட்டியில் இரத்தக் காட்டேரி உலாவுவதாக தகவல் பரவத் துவங்கியது. பெற்றோர் குழந்தைகளை மாலைநேரத்தில் வெளியே அனுப்பாமல் பாதுகாத்து வந்தனர்.

ஒருநாள் மாலை 7 மணி ராமு நூலகத்திற்கு சென்று வெளியே வந்து வீட்டுக்கு நடக்கத்துவங்கினான். ராமு இருளில் நடந்துவந்தபோது, யாரோ அவனை பின்தொடர்ந்துவருவது போலத் தோன்றியது. திரும்பிப்பார்த்தபோது ஒரு முக்காடிட்ட 14 வயது மதிக்கத்தக்க உருவம் அவன் பின்னே வந்துகொண்டிருந்தது. ராமு அந்த இளம் வயதினன் பெயரைக்கேட்க அவன் "நான் இளம் இரத்தக்காட்டேரி (Count Dracula Jr)".

"உங்களுக்கு என்ன வேண்டும் இளம் காட்டேரியாரே!". குட்டி காட்டேரி "எனக்கு சூடான இரத்தம் வேண்டும். உன்னிடம்தான் குடிக்கப் போகிறேன்" என்றுரைத்தது. அவன் "காட்டேரியாரே, உங்களுக்கு என்ன வகை இரத்தம் (பிளட் குரூப்) பிடிக்கும்". குட்டி காட்டேரி "எனக்கு மனிதர்கள் ரத்தம் வேண்டும்" என்று கூறியது.

ராமு: "காட்டேரியாரே. மனிதர்களின் இரத்தம் பலவகைப்படும். ஏ வகை, பி வகை, ஓ வகை மற்றும் பல . இதில் உங்களுக்கு என்ன வகை வேண்டும்.

புரியவில்லையே என்ற காட்டேரிக்கு, ராமு,"உனக்கு புரியும் வகையில் கூறுகிறேன். உன் இரத்தம் வகை என்ன!" காட்டேரி முழித்தது.

ராமு: "சரி. உனக்கு தெரியவில்லை போலும். நான் உனக்கு விளக்குகிறேன். நீ இனிப்பு சாப்பிட்டு இருக்கியா. அதன் சுவை தெரியுமா?

காட்டேரி: "நான் நீண்ட காலம் என் சவப்பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்துவிட்டு தற்போதுதான் எழுந்துவந்துள்ளேன். எனக்கு இரத்தச்சுவை மறந்து விட்டது, பசி வந்தால் இரத்தம் குடிக்கவேண்டுமென்று என் கொள்ளுத்தாத்தா (Count Dracula Super Sr.)

ராமு: "அப்ப சரி. இப்ப காலம் மாறிவிட்டது. எங்க ஊருல மிருகங்கள் கூட இப்ப அவங்க உணவை

மாத்திக்கிட்டாங்க. புலி சிங்கம் கூட இனிப்பு இரத்தம்தான் குடிக்குறாங்க. அதை சூடான கொக்கோ (ஹாட் சாக்லேட்) பானம் என்று கூறுவார்கள். அது இனிப்பாகவும் புத்துணர்ச்சி கொடுப்பதாகவும் இருக்கும்".

காட்டேரி: "சரி. நீ என் ஆவலைத் தூண்டுகிறாய். எனக்கு அந்த ஹாட் சாக்லேட் பானம் கொஞ்சம் கிடைக்குமா?"

ராமு: "சரி, அதற்கு நீ என் வீடு வரை வந்துவிடவேண்டும். நான் உள்ளே சென்று அதை எடுத்து வருகிறேன்"

குட்டி காட்டேரி அதற்கு ஒத்துக்கொண்டது. இருவரும் ராமு வீடுவரை சென்றனர். வீட்டுக்கு சென்ற அவனை பெற்றோர் கண்ணீருடன் கட்டியணைத்தனர். அவன் ஒரு ஹாட் சாக்லேட் உடனே வேண்டுமென்று கேட்டான். ராமுவின் அம்மா உடனே ஹாட் சாக்லேட் வைத்து கொடுத்தார். ராமு அவர்களை பின்தொடர வேண்டாமென்று கூறிவிட்டு ஹாட் சாக்லேட்டை கொணர்ந்து காட்டேரிக்கு கொடுத்தான். காட்டேரிதான் வாழ்நாளிலே இனிப்பை சாப்பிட்டதேயில்லையே. அது ஹாட் சாக்லேட்டை சப்பு கொட்டி கொட்டி குடித்தது.

காட்டேரி: "இந்த பானம் இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும்"

ராமு: "நான் தினமும் உனக்கு இது வேண்டுமளவு கொடுக்கிறேன். இனி நீ இரத்தம் குடிக்கவேகூடாது"

காட்டேரி: "எங்கள் குலதெய்வம் மேல் ஆணை. நான் இனிமேல் ஹாட் சாக்லேட் மட்டுமே குடிப்பேன்"

ராமு: இப்படியாக இரத்தக்காட்டேரி நம் கேட்டியில் ஹாட் சாக்லேட் காட்டேரியாகி மாறிவிட்டது. சந்தோசம்தானே குழந்தைகளே!



ராம்.... ராம்....எழுந்திரு டயம் ஆச்சு. ஜானகி அவனை எழுப்பிவிட்டு ஆபீஸ் காலில் இணைந்தாள்.

மணி பார்த்தான் 800

பல் தேய்த்து, குளிக்காமல் அவசரமாக பேண்ட்டில் நுழைந்து காருக்கு விரைந்தான். காரை விரட்டி 901க்கு ஆபிஸில் நுழைந்தான்.

அவனை பார்த்த "Team Mate" சாருலதா, மணிக்கட்டை திருப்பி டைம் பார்த்தாள்.

ராமுக்கு 'சுருக்' என்றது.



மணி வைதீஸ்வரன்

1200க்கு பசித்தது. எழுந்தான்.

சாரு அவனை பார்த்து பின்பு மணிக்கட்டை திருப்பி டைம் பார்த்தாள்.

ராமுக்கு 'சுருக்' என்றது.

300 மணிக்கு இயற்கை உபாதை தர எழுந்தான். தன்னிச்சையாக சாருவை பார்த்தான். அவள் மணிக்கட்டை திருப்பி டைம் பார்த்தாள்

'சுருக்'

600 மணிக்கு வீட்டுக்கு செல்ல பேக் செய்து எழுந்தான். திரும்ப சாரு மணிக்கட்டை திருப்பி டைம் பார்த்தாள்..

கதவு வரை சென்றவன், பொறுக்காமல் திரும்பினான்.

சாரு, Are you clocking me ?. இந்த கம்பெனிக்கு நான் நாயா உழைக்கிறேன், எதுக்கு என்னை மணியை பாத்து பாத்து torture பண்றே ?.. என்றான்.

சாரு சிரித்தாள்.

"போடாங்... தெனமும் clock work மாதிரி அதே டைம்க்கு வர்றே, அதே டைம்க்கு பிரேக் எடுக்கறே, அதே டைம்க்கு போறே,... உன்னால நானும் பாஸை இம்ப்ரெஸ் பண்ண அதையே பண்ணி தொலைய வேண்டி இருக்கு. Infact you are torturing me", என்றாள்.

சித்திரச் சாளரம்



அதிதி அரவிந்த்



ஆராத்யா அரவிந்த்



ருத்விக் பிரபாகரன்
Grade 5– Cypress Tamil school



சிவானி ஜெயசபரி
ஆசிரியர் பெயர்: ரம்யா

சித்திரச் சாளரம்



ஸ்ரீகுருமூர்த்தி
Grade 3– Bridgeland Tamil school teacher



பூர்வான்ஷி பாலாஜி ராவ்



ஆத்விக் கார்த்திகேயன்
4 th grade , BKM – Bridgeland.



இமயா சுரேந்தர்
Grade 5

சித்திரச் சாளரம்



வருண்கார்த்திக் ராஜு பனுகண்டி
Grade 5 Cypress Tamil school , Teacher Ramya.M



ஐஸ்வர்யா சதிஷ் குமார்
Intermediate Katy East



சுவஸ்தி ராமகிருஷ்ணன்
வகுப்பு 4 Sugar Land



அபிநவ் கிருஷ்ண பிரசாத்
Grade 3 BKM Katy West.



இந்திய ஸ்டைல் குனாஃபா

(Indian Style Kunafa Recipe)

ஆர்த்தி கோபி, [BKM தமிழ்ப்பள்ளி ஆசிரியை]



தேவையான பொருட்கள்

- வெளி அடுக்கு: 200 கிராம் மெல்லிய சேமியா (அல்லது Kataifi) + 4 டேபிள் ஸ்பூன் உருக்கிய நெய்
- உள் அடுக்கு (Filling): 1 கப் கெட்டியான ரப்ரி (அல்லது 1/2 கப் துருவிய பன்னீர் + 1/2 கப் இனிப்பு கோவா)
- சர்க்கரை பாகு: 1 கப் சர்க்கரை, 3/4 கப் தண்ணீர், 4 ஏலக்காய், சிறிதளவு குங்குமப்பூ, 1 டீஸ்பூன் ரோஸ் வாட்டர்
- அலங்கரிக்க: நறுக்கிய பிஸ்தா, பாதாம்

செய்முறை

1. ஒரு பாத்திரத்தில் சர்க்கரை, தண்ணீர், ஏலக்காய் மற்றும் குங்குமப்பூ சேர்த்து கொதிக்க வைக்கவும். ஒரு கம்பி பதம் வந்ததும் அடுப்பை அணைத்து ரோஸ் வாட்டர் சேர்க்கவும்.
2. பிறகு சேமியாவை சிறு துண்டுகளாக உடைத்து, உருக்கிய நெய்யுடன் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.
3. ஒரு நெய் தடவிய பேனில் (Pan) பாதி சேமியாவை பரப்பி பலமாக அழுத்தவும். நடுவில் ரப்ரி அல்லது பன்னீர்-கோவா கலவையை பரப்பவும்.
4. அதன் மேல் மீதி சேமியாவை தூவி மெதுவாக அழுத்தவும். மிதமான தீயில் பேனை வைத்து அடிப்பாகம் பொன்னிறமாகும் வரை வேகவைக்கவும்.
5. பின் அதை மெதுவாக திருப்பி போட்டு மறுபக்கமும் வேகவைக்கவும் (அல்லது ஓவனில் 180°C வெப்பநிலையில் 20 நிமிடங்கள் பேக் செய்யவும்).
6. சூடான குனாஃபா மீது தயாரித்து வைத்துள்ள சர்க்கரை பாகை ஊற்றவும். மேலே நறுக்கிய பிஸ்தா, பாதாம் தூவி சூடாக பரிமாறவும்.

இந்திய ஸ்டைல் குனாஃபா தயார்! "பஞ்சு போல மென்மை, வாயில் வைத்த உடனே கரையும் இனிமை".

திருமுறையில் அறிவியல்

வைத்தி திருநாவுக்கரசு Ph.D.

நம்மில் பலர் சிறுவயதில் நமது பெற்றோர்கள் அல்லது ஆசிரியர் வாயிலாக சின்னஞ்சிறு கதை வடிவில் சிவனடியார்களைப் பற்றி கேள்விப்பட்டிருப்போம். முக்கியமாக நால்வர் என்று அறியப்படும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் பற்றி சிலருக்கு நன்றாகவே தெரியும்.



இதில் முதல் மூவர் பாடிய நூல் தேவாரம் என்று அழைக்கப்படும். தேவாரத்தில் இருந்து ஒரு சில பாடல்களே பலரும் அறிவர். உதாரணமாக, "தோடுடைய செவியன் ...", "கூற்றாயினவாறு ...", "பித்தா பிறைசூடி ..." என்று தொடங்கும் பதிகங்கள் யாவரும் அறிந்ததே. சிறிது ஆழமாக, மற்ற பிற தலங்களில் (ஊர்களில்) மூவர் பாடிய பதிகங்களை உற்று நோக்கினால், கிடைக்கப்பெறும் கருத்துக்கள் வியப்பைத் தரும். இந்த கட்டுரையில், இது தொடர்பாக, அறிவியல் சிந்தனைகள் உள்ள ஒரு சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

நவீன அறிவியலில் நிரூபணம் (proof) முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு கருத்தை நிலை நிறுத்த பல காலம் ஆகிறது. ஒரு சில கண்டுபிடிப்புகளுக்கு முக்கிய அங்கீகாரமான நோபல் பரிசு கிடைக்க பல ஆண்டுகள் ஆகலாம். சில கோட்பாடுகள் சமயத்தில் சொல்லப்படும் போது அதில் நம்பிக்கை அல்லது ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பலருக்கு இல்லை. அதனால் கூட கடவுள் நம்பிக்கை என்பது மேலை நாட்டவருக்கு குறைவு என்றே சொல்லலாம்.

நம்முடைய நாட்டில் தோன்றிய மூவர் சிவனைப் பற்றி சொன்ன பல்வேறு கருத்துக்களில் நாம் வசிக்கும் பூமி, கோள்கள் (planets) மற்றும் சந்திரன் (moon) பற்றியும் ஒரு சில பாடல்களில் சொல்லியிருக்கின்றார்கள். மேலும் பிரபஞ்சம் (அகலிடம்) உருவான விதம் பற்றியும் கூறியுள்ளனர். இந்த கருத்துகளைத் தற்போது தான் அறிவியல் நமக்கு சொல்கிறது. ஆனால் இன்றைய அறிவியல் இதனை நிரூபிக்க



இயலாமல் போராடிக்கொண்டுள்ளன. இதனை முதல் உதாரணத்தில் காணலாம்.

திருநாவுக்கரசர் திருவாரூரில் அளித்த திருத்தாண்டகத்தில் (6.034), பாடல் ஒன்பதில், பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னோ பின்னோ சிவன் திருவாரூரில் எழுந்தருளியுள்ளான் என்று வினவுகிறார். இந்த பதிகத்தில், ஒவ்வொரு பாடலிலும் இறைவன் எப்போது வந்து திருவாரூரில் அமர்ந்தான் என்று நயமாக கேட்டுள்ளார் (carbon dating).



இந்த பாடல் இதோ:

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டும்
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே

இதன் பொருள்:

"மூல முதற்கருவினின்றும் புகை (Nebula) எண்வகையாய்த் தோன்றிப் பஞ்சபூதங்களாய்ப் பற்பல உலகங்களாய் விரிந்ததென்றும்,முதலினின்ற ஆதிசூக்குமப்பொருளின் தத்துவந்தான் மனமென்றும் முறையே ஆகாயம் முதல் மண்ணீராகப் பஞ்சபூதங்களின் தத்துவம் செவி முதல் பஞ்சேந்திரியங்கள் என்றுங்கூறுவர். இத்தகைய மாயாவிருத்திப் பிரபஞ்சம் பற்றி அப்பர் தம் வினாவினால் வெளியிடுவது காண்க. பஞ்சேந்திரியங்களுடன் திரிகரணங்களைச் சேர்த்துப் புலன்கள் எட்டென்பர்.

சூன்யமான புகையினின்று முறையே ஆகாயமும், அதினின்று காற்றம், அதனால் தீயும், அத்தீயால் நீரும், நீரினின்று மண்ணும் வெளிவந்தனவென்பது புராணக் கற்பனையாய்க் காணப்படினும், நவீன மேல்நாட்டு அறிவியல் ஆராய்ச்சிக்குச்சற்றுப்பொருந்துவதாகவே காணப்படுகின்றது. இன்னும் உலகங்கள் உற்பத்தியாகின்றன. அவை, சில நட்சத்திரங்களிடையே காணப்படும் புகைகள் (Nebulae) என்று தூரக்கண்ணாடியால் வானசாஸ்திரிகள் நீருபிக்கின்றனரன்றோ? அப்புகைகளின் போக்கையும் அவற்றினின்று உண்டாகும் பதார்த்தவகைகளையும் சில நூற்றாண்டுகளுக்குப்பதிவு செய்து பார்ப்பின் நம் முன்னோர் கூற்றுக்கு சான்றாகும். *Please refer to any modern cosmology textbooks.*

அடுத்ததாக, திருநாவுக்கரசர் திருப்பேரெயில் என்ற தலத்தில் பாடியது இதோ:

சொரிவிப் பார்மழை சூழ்கதிர்த் திங்களை
விரிவிப் பார்வெயிற் பட்ட விளங்கொளி
எரிவிப் பார்தணிப் பாரெப் பொருளையும்
பிரிவிப் பாரவர் பேரெயி லாளரே.

இந்தப்பாடலின் பொருள் பின்னேவருமாறு:

பேரெயில் தலத்து இறைவர், மழை சொரிவிப்பார் ; திங்களைச் சூழ்கதிர் விரிவிப்பார் ; ஞாயிற்றின் கண் பொருந்திய விளங்கொளியை எரிவிப்பார் ; எப் பொருளையும் தணிவிப்பார், அவற்றைப் பிரிவிக்கும் இயல்பினரும் ஆவர்.

இந்த சிறிய பாடலில், சூரியனின் வெயில் கதிர்களை சந்திரனில் பட்டு ஒளி ஊட்டுகிறார் (reflection) என்று சொல்கிறார். பிறகு, சூரியனைக் காலம்தோறும் எரிவிப்பர் (விளங்கொளி -- வினைத்தொகை) என்றும் கூறுகிறார். நாம் இதனை nuclear fusion என்று தற்போதைய நடைமுறையில் அறிவோம். இதனால் விளையும் எல்லையில்லா வெப்பத்தை தணிப்பர் என்றும் எந்த பொருளையும் பிரிவிப்பர் (fission) என்றும் சொல்கிறார்.

தற்கால உரையாசிரியர்கள் ஒரு அறிவியல் கண்ணோட்டத்தோடு பார்த்தால், பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்துக்கள் வியப்பைத் தரும். அதோடு, புது கண்டுபிடிப்பகளுக்கும் இவை உதவும்.

Reference: https://www.thevaaram.org/



பொமோடோரோ நுட்பம்:

கவனத்தைக் கூர்மையாக்கி உற்பத்தி திறனை உயர்த்தும் எளிய வழி

Devaraj Palanisamy

இன்றைய வேகமான வாழ்க்கையில் நேரம் என்பது மிகவும் அரிதான வளம். பணி, படிப்பு, குடும்பம் என பல பொறுப்புகளுக்கு இடையே கவனம் சிதறி, வேலை முடிவதற்கு முன்பே சோர்வு வந்துவிடுகிறது. இத்தகைய சூழலில் உதவிக்கு வருவதுதான் பொமோடோரோ நுட்பம் (Pomodoro Technique).



இத்தாலியப் பல்கலைக்கழக மாணவராக இருந்த ஃபிரான்செஸ்கோ சிரில்லோ (Francesco Cirillo) 1980களின் பிற்பகுதியில் இந்த முறையை உருவாக்கினார். சமையலறை டைமர் ஒன்று தக்காளி வடிவில் இருந்த தால், இத்தாலிய மொழியில் தக்காளி என்று பொருள்படும் “பொமோடோரோ” என்ற பெயரை அவர் தேர்ந்தெடுத்தார்.

பொமோடோரோ நுட்பம் எப்படி செயல்படுகிறது?

இதன் அடிப்படை மிகவும் எளிமையானது:

1. செய்ய வேண்டிய பணியைத் தேர்வு செய்யுங்கள்.
2. டைமரை 25 நிமிடங்களுக்கு அமைத்து, அந்தப் பணியில் மட்டும் முழுக் கவனம் செலுத்துங்கள்.
3. டைமர் ஒலித்ததும் 5 நிமிடங்கள் குறுகிய இடைவேளை எடுத்துக்கொள்ளுங்கள்.
4. இதையே நான்கு முறை (நான்கு பொமோடோரோ) செய்யுங்கள்.
5. நான்கு சுற்றுகளுக்குப் பிறகு 15 முதல் 30 நிமிடங்கள் நீண்ட இடைவேளை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு 25 நிமிட வேலை நேரமும் ஒரு “பொமோடோரோ” என்று அழைக்கப்படுகிறது. இந்தக் குறுகிய கால அளவு மனதை அதிக அழுத்தமின்றி கவனம் செலுத்த வைக்கிறது. இடை வேளைகள் மனச்சோர்வைத் தடுத்து, மீண்டும் புத்துணர்ச்சியுடன் வேலைக்குத் திரும்ப உதவுகின்றன. போமோடோரோ நுட்பத்தை எளிதாகப் பின்பற்ற பல ஆப்ஸ்கள் உள்ளன:

உதவும் செயலிகள்

iOS: Be Focused, Focus Keeper, Forest, Flora

Android: Forest, Focus To-Do, Pomodoro Smart Timer, TomatoTimer

வலைத்தளங்கள்: pomofocus.io, tomato-timer.com

பொமோடோரோ நுட்பம் என்பது வெறும் டைமர் அல்ல; அது நேரத்தை மதித்து, கவனத்தை வளர்த்து, வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும் ஒரு வாழ்க்கை முறை. இன்றே ஒரு சிறிய டைமரை அமைத்து முதல் 25 நிமிடத்தைத் தொடங்குங்கள். சிறிய மாற்றமே பெரிய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

Thanks,



டெக்சாஸ் இரும்பு மனிதன்

நேர்காணல் - வித்யா பழனிசுவாமி

1. உங்களைப் பற்றிய சிறிய அறிமுகம்



என் பெயர் கண்ணன் காந்தி. என் மனைவியின் பெயர் சுபா கண்ணன். நான் IT துறையில் பணியாற்றி வருகிறேன். நீண்டகாலமாக உடற்பயிற்சி, ஓட்டம், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் நீச்சல் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டுள்ளேன்.

இதுவரை 150-க்கும் மேற்பட்ட அரை மரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். பல முழு மரத்தான் போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளேன். பல தனிநபர் சைக்கிள் போட்டிகளிலும், MS 150 போன்ற நீண்டதூர சைக்கிள் நிகழ்வுகளிலும், Hotter'N Hell போன்ற போட்டிகளிலும் பங்கேற்றுள்ளேன். மேலும், பல நீச்சல் போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளேன்.

இந்த அனுபவங்களின் தொடர்ச்சியாக, நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் ஓட்டம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்த IRONMAN 70.3 போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்தேன்.

2. IRONMAN 70.3 போட்டியில் உங்கள் பங்களிப்பு என்ன?

IRONMAN 70.3 போட்டியில் 1.9 கிலோமீட்டர் நீச்சல், 90 கிலோமீட்டர் சைக்கிள் ஓட்டுதல் மற்றும் 21.1 கிலோமீட்டர் ஓட்டம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்த முழுப் போட்டியையும் நிறைவு செய்தேன்.

இந்தச் சாதனைக்கான அடிப்படை என்னுடைய முந்தைய விளையாட்டு அனுபவங்களாகும். முதலில் குறுகிய தூரப் பயிற்சிகளிலும், Sprint Triathlon போட்டிகளிலும் பங்கேற்றேன். அதன் பிறகு Olympic-distance Triathlon போட்டியில் கலந்து கொண்டேன். பல ஓட்டப்பந்தயங்கள், நீச்சல் போட்டிகள் மற்றும் நீண்டதூர சைக்கிள் நிகழ்வுகளில் பெற்ற அனுபவங்களுக்குப் பிறகுதான் IRONMAN 70.3 போட்டிக்கான தீவிரப் பயிற்சியைத் தொடங்கினேன்.

3. ஏன் IRONMAN போட்டியில் பங்கேற்க வேண்டும் என்று தோன்றியது?

ஓட்டப்பந்தயம், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் நீச்சல் ஆகிய துறைகளில் தனித்தனியாக எனக்கு அனுபவம் இருந்தது. அவற்றை ஒரே போட்டியில் இணைத்து, என்னுடைய உடல் மற்றும் மன





வலிமையைச் சோதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

இந்தியாவில் இருந்தபோது கிணற்றில் நீந்திப் பழகியிருந்தாலும், நீண்ட தூர நீச்சல் பயிற்சி மேற்கொண்ட அனுபவம் அதிகமாக இல்லை. அமெரிக்கா வந்த பிறகு நீண்ட தூர நீச்சல், *open-water swimming* மற்றும் *Triathlon* பயிற்சிகளில் என்னை மேம்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அந்தப் பயணத்தின் அடுத்த முக்கிய இலக்காக *IRONMAN 70.3* எனக்குத் தோன்றியது.

4. போட்டிக்காக எவ்வாறு தயாரானீர்கள்?

போட்டியில் பங்கேற்பது என்று முடிவு செய்த பிறகு, மூன்று விளையாட்டுகளுக்கும் தனித்தனியாகவும், பின்னர் அவற்றை இணைத்தும் திட்டமிட்டுப் பயிற்சி மேற்கொண்டேன்.

எங்கள் சமூகத்தில் நண்பர்களுடன் சேர்ந்து நீண்டகாலமாக ஒரு பயிற்சிக் குழுவை உருவாக்கி நடத்தி வருகிறோம். மாற்று நாட்களில் வழக்கமான பயிற்சிகளையும், வார இறுதிகளில் நீண்டதூரப் பயிற்சிகளையும் மேற்கொள்வோம். நண்பர்கள் அனைவரும் என்னுடன் இணைந்து பயிற்சி செய்தது இந்தப் பயணத்தில் மிகப்பெரிய ஊக்கமாக இருந்தது.

நீச்சலில், போட்டி இலக்கான 1.9 கிலோமீட்டரை விட அதிகமாக, சில நேரங்களில் சுமார் 4 கிலோமீட்டர் வரைப் பயிற்சி செய்தேன். சைக்கிளில் 90 கிலோமீட்டர் இலக்கைத் தாண்டி, நீண்டதூர 150 கிலோமீட்டர் சைக்கிள் பயிற்சிகளை மேற்கொண்டேன். *MS 150* மற்றும் பிற நீண்டதூர சைக்கிள் நிகழ்வுகளில் பெற்ற அனுபவமும் எனக்கு உதவியாக இருந்தது.

நீச்சல் மற்றும் சைக்கிள் ஓட்டுதல், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் ஓட்டம் போன்ற இரண்டு விளையாட்டுகளைத் தொடர்ந்து செய்வதற்கான *Brick Training* முறையிலும் பயிற்சி பெற்றேன். இறுதியில் மூன்று பிரிவுகளையும் தொடர்ச்சியாகச் செய்யும் பயிற்சிகளையும் மேற்கொண்டேன். குறிப்பாக, நீண்ட தூர சைக்கிள் ஓட்டிய உடனே ஓடும்போது ஏற்படும் தசைப்பிடிப்பு மற்றும் கடுமையான சோர்வை சமாளிக்க அதிகப் பயிற்சி தேவைப்பட்டது.

Galveston IRONMAN போட்டி *Gulf of Mexico* பகுதியில் நடைபெற்றதால், நீச்சல் குளம் அல்லது ஏரியில் பயிற்சி பெறுவதிலிருந்து மாறுபட்ட *open-water* பயிற்சி தேவைப்பட்டது. கடல் அலைகள், தண்ணீரில் குறைந்த பார்வைத்திறன், பலர் ஒரே நேரத்தில் நீந்தும்போது ஏற்படும் தள்ளுதல் மற்றும் இழுத்தல் போன்ற சூழ்நிலைகளுக்காகத் தனிப்பட்ட முறையில் தயாரானேன்.

மேலும், போட்டி மார்ச் மாதத்தில் நடைபெற்றதால், டிசம்பர் முதல் ஜனவரி மாதங்களில் கடுமையான குளிரிலும் பயிற்சி செய்ய வேண்டியிருந்தது. குளிரான காலநிலையில் நீந்துதல் மற்றும் அதிகாலையில் நீண்டதூர சைக்கிள் ஓட்டுதல் போன்ற சவால்களையும் படிப்படியாகச் சமாளித்தேன்.

5. போட்டி நாளில் உங்கள் மனநிலை எப்படி இருந்தது? முடித்த பிறகு எப்படி உணர்ந்தீர்கள்?

போட்டி தொடங்குவதற்கு முன்பு, நீச்சல் தொடங்கும் வரிசையில் நின்றபோது மிகுந்த பதற்றம் ஏற்பட்டது. சில போட்டியாளர்கள் நீரில் சிரமப்படுவதையும், நீரில் மூழ்குவதையும் *lifeguards* மற்றும் *rescue* குழுவினர் அவர்களை *airlift and jet ski* மூலமாக மீட்பதையும் நேரில் பார்த்தோம். அந்தச்



சூழ்நிலை போட்டியின் தீவிரத்தையும் கடினத்தன்மையையும் உணர்த்தியது. நம்மால் இதை வெற்றிகரமாக முடிக்க முடியுமா என்ற சந்தேகமும் ஒரு கணம் ஏற்பட்டது. போட்டி அன்று ஒரு பெண்மணி நீரில் மூழ்கி இறந்தார். அதைக் கேட்டவன் மிகவும் வேதனை அடைந்தேன்.

ஆனால், பல மாதங்களாக மேற்கொண்ட பயிற்சியும், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் அளித்த ஆதரவும், நம் மீது இருந்த நம்பிக்கையும் அந்தப் பதற்றத்தைத் தாண்ட உதவின. ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியாகக் கவனித்து, பொறுமையாகப் போட்டியைத் தொடர்ந்தேன்.

இறுதிக் கோட்டைக் கடந்த அந்த நொடி மிகவும் உணர்ச்சிகரமானதாக இருந்தது. பல மாதங்களின் உழைப்பு, கடுமையான குளிரிலும் மேற்கொண்ட பயிற்சி, உடல் சோர்வு மற்றும் மன அழுத்தத்தைத் தாண்டிய முயற்சி அனைத்தும் அந்த ஒரு தருணத்தில் நிறைவேறியதாக உணர்ந்தேன்.

6. வரும் தலைமுறைக்கு உங்கள் அறிவுரை என்ன?

பெரிய இலக்குகளை ஒரே நாளில் அடைய முடியாது. சிறிய இலக்குகளாகப் பிரித்து, படிப்படியாக முன்னேற வேண்டும். நான் கூட குறுகிய தூர *Triathlon* போட்டிகளில் தொடங்கி, பின்னர் *Olympic-distance* போட்டிகளில் பங்கேற்று, அதன் பிறகே *IRONMAN 70.3* போட்டிக்குத் தயாரானேன்.

ஒழுக்கமான பயிற்சி, சரியான உணவு, போதுமான தூக்கம் மற்றும் மன அமைதி ஆகியவை வெற்றிக்கு மிகவும் முக்கியமானவை. பயிற்சி செய்வது மட்டுமல்லாமல், உடலுக்கு ஓய்வும் அளிக்க வேண்டும்.

இந்தப் பயணத்தில் என் நண்பர்கள் அளித்த ஆதரவு மிகவும் முக்கியமானது. அதைவிட, என் மனைவி சுபா கண்ணன், என் அம்மா மற்றும் என் குழந்தைகள் அளித்த ஆதரவு இல்லாமல் இந்தச் சாதனையை அடைந்திருக்க முடியாது. சரியான நேரத்தில் தூங்குதல், ஆரோக்கியமான உணவு, மன அமைதி மற்றும் குடும்பப் பொறுப்புகளில் அவர்கள் அளித்த ஒத்துழைப்பு எனக்கு மிகப்பெரிய பலமாக இருந்தது.

இளைஞர்கள் தங்கள் உடல்நலத்திற்கும் மனநலத்திற்கும் முக்கியத்துவம் அளித்து, தங்களுக்கு விருப்பமான விளையாட்டில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். முயற்சி, பொறுமை, ஒழுக்கம் மற்றும் குடும்பம்-நண்பர்களின் ஆதரவு இருந்தால் எந்த இலக்கையும் அடைய முடியும்.



தொல்காப்பியம்:

தொல்காப்பியம், பழந்தமிழ் அறிஞர்கள் உண்மையிலேயே மொழியியல் கணினி விஞ்ஞானிகளாகச் செயல்பட்டனர் என்பதைக் காட்டுகிறது. கணினிகள் வருவதற்கு முன்பே, மனிதப் பேச்சைத் தெளிவான விதிகளுக்குள் கொண்டுவந்து ஒரு நிலையான அமைப்பை உருவாக்கினார்கள். அந்த அமைப்புதான், இன்று AI models, கணினிகளும். எந்திரங்களும் தமிழை இயல்பாகப் பேசவும் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

தமிழன் என்று சொல்லடா!
தலைநிமிர்ந்து நில்லடா!
அமிழ்தம் என்னும் மொழியடா!
அன்னைத் தமிழ் மொழியடா!

பகைவர் கூட்டம் மேவியே - நம்மைப்
பயமுறுத்தப் பார்க்கினும்,
திகையாமல் நில்லடா - நெஞ்சைத்
திரட்டி நில்லடா!

அன்பும் அறமும் நம்மொடு - என்றும்
அழியாத சொத்தடா!
துன்பம் கண்டு அஞ்சிடாது - வீரத்
தோடு நில்லடா!

அறிவும் வீரமும் சேர்ந்ததே - தமிழ்
அன்னையின் பெருமையடா!
உலகினில் உயர்ந்த இனமிது - என்று
உரைத்து நில்லடா!

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

